12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 30—4—1978 | இதழ் 33

பாரதிதாசன்

கலைஞர் கவிதை

நிமிர்ந்த நோக்கு—
நெரித்த புருவம்
நீர்வீழ்ச்சி ஓசை — நெற்
கதிர்கட்டு மீசை
பாட்டெழுதும் வித்தையிலே
பாரதி—ரசவாதம்கற்றவனும்—இவனைப்
பார் அதிரசவாதம் கற்றவனும்
அத்துணை இனிப்பு இவன்பாட்டில்

சஞ்சீவி பர்வதத்தின் சாரலுக்கு நமை—
இட்டுச் சென்று
சங்கீதப் பேச்சொன்றைக் கேட்கச் சொல்வான்
காதலி 'நோகாமல் முத்தங்கள்
நூறு கொடுப்பேன் என்றாள்,
காதலன், 'ஆசையால் ஓர் முத்தம்
அச்சாரம் போடென்றான்
அதிரச வாதமென்றோ ... அஃது
அவனுக்கே பழக்கமன்றோ!

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல்வாய்க்காலும், வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம்
எவரின் தோள்கள்?"

வினாக்குறியா?......
வெடிக்கும் எரிமலையா?......
புரட்சிக் கவிஞரெனப்
புவியொப்பி மாலைபோடப்
போதாதோ இவ்வரிகள்?

"ஒரு மனிதன் தேவைக்கே
இந்தத் தேசம் உண்டென்றால்
அத்தேசம் ஒழிதல் நன்றாம்"

முழுமனிதன் பாட்டன்றோ இப்பாட்டு;
இதுகேட்டு
அழும்மனிதன் அரைமனிதன்... குறைமனிதன்...
அரை குறைமனிதன்

"பொய்யுரைப்போன் பயங்காளி—பிறர்
பூமி சுரண்டிடுவோன் பெருச்சாளி
வையக மக்கள் எல்லோரும்— நலம்
வாய்த்திட எண்ணிடுவோன் அறிவாளி'

கருத்துக் கவிஞன்; சற்றுக் கருத்த கவிஞன்
காலக் கவிஞன்; முக்காலக் கவிஞன்

அவன்

சுவையாய்த் தமிழுக்கு அருவியின்பாடல்;
அமைவாய்க் கண்ட அற்புதம் என்னே

"விருந்து வரக்கண்ட
மெல்லி முகம்போல், முல்லை
அரும்பு மலர்ந்ததென்ன வேடிக்கை...
தெரிந்தவரைக் கண்டாலும்
தெரியாதாரைக் கண்டாலும்
சிரிப்பதுதான் இதன் வாடிக்கை..."
இன்னொன்று கேளீர்; விழிக்கு

இனியவள் ஒருத்தி ஆடுகின்றாள்...மொழிக்குச்
சுவையேற்றித் தாசன் பாடுகின்றார்...

"சதங்கை கொஞ்சும் பாதம்
சதிமிதிக்கும் வானில்
மிதக்கும் அவள் தாமரைக் கை!
மேலும் வதங்கலிலாச்
சண்பகத்து நல்லரும்பு'
சாடைபுரிகின்ற விரல்,
கண் கவரும் செம்பவளக் காம்பு!'

மற்றொன்று

"தொண்டையிலே ஒன்றுமே
அடைக்கவில்லை!
துணைவனவன் சிறுகனைப்புக்
கனைக்கலுற்றான்
அண்டையிலே மங்கைபோய்
'அத்தான் என்றாள்
அத்தானா தூங்கிடுவான்? (அருகில்)
உட்கார் என்றான்"

அவருக்கே உரிய கேலி!
அவர்கவிதைக்கே உரிய சுவை!
உவமைக்கோர் கவிஞன் என்று
உரைக்கின்றார் பெருங்கவிஞர்...
ஒன்றிரண்டா, எடுத்துச் சொல்ல?

'தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த
கலப்பன்ன இருள்தன் கட்டுக் குலைந்தது"

"சோற்றை அள்ளுங்கால்
துவள் வாழைத் தண்டில் ஊறும்
சாற்றைப்போல வடியத்தக்க வண்ணம்
ஊற்று நெய்யை"

புரட்சியா? அமைதியா?
பொங்கும் உவமையா? கருத்தா? தமிழ்ப்
போதை தரும் சுவைத் தேனா?
எதனை எது மிஞ்சுமென்று
எவர் கூறி வாதிட்டாலும்
ஒப்பமாட்டேன்; ஒன்றையொன்று
மிஞ்சுமென்பேன்; ஏடெத்தனை அவர் தந்தார்!

இருண்ட வீட்டில்
குடும்பவிளக்கேற்றிவைத்தார்
இசையமுது பொழிந்து, அதற்குப்
பாண்டியன் பரிசு பெற்றார் ... நமக்குக்
குறிஞ்சித்திட்டு முண்டு; குயில் இதழ் நடத்தும்
கவிதை; (போது
அழகின் சிரிப்பாலே தமிழியக்கம் கவர்ந்துவிட்டார்
அமைதிக்கு நல்ல தீர்ப் பளித்தார்—அவர்
காதல் நினைவாலே கவிப்பெண்ணை
வாடவிட்டு ; சாவின்
எதிர்பாராத முத்தத்தால் பிரிந்து விட்டார்
என் ஆசான் பாரதியைப் பார்ப்பேன்
எனப் பறந்து விட்டார்.

இருகவியும் இறப்புலகில் சந்தித்து
என்ன பேசியிருப் பாரென
எண்ணுகிறீர்?

நாம் தமிழ்நாட்டில் இறந்த தில்லையென்று
நம் மக்கள் பேசுகின்றார்
நம்புவதோ இதனை நாமும்?

செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே......'

சிந்தைகவர் இந்தப் பாட்டினையே
செயல்படுத்த மிக்க மனம்
நொந்துநான் காத்திருந்தேன்...இன்று
விந்தை கண்டேனய்யா தம்பி...... நம்
தந்தையார் நாட்டுக்குத் தமிழ்நாடெனப் பெயர்
தந்தவர் அண்ணா! நாம் வாழ்கின்றோம் அங்கு!
மெய்யலவோ என்று ;

பரவசத்தால் நடமாடும் பாரதிக்கு
வணக்கம் சொல்லிப் பாவேந்தன் பகர்வான்!

"கனியிடை ஏறிய சுளையும்—முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறியதேனும்—காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!"

என்றெழுதி வந்தேன்
இன்றெல்லாத் தமிழர்களும் தமிழைத் தம்
இன்னுயிராய்க் கொண்டு
சென்றங்கு எட்டுத்திசை பரப்புதற்கு முனைந்தார்
அய்ய! நாம் சாகவில்லை—வாழுகிறோம்
தாயகத்தில்!
உண்மைதான் நீர் உரைத்ததென்றான்
பாரதியும் தன்தாசனைத் தழுவிக் கொண்டு

பாரதிரச் சிரிக்கின்றான்
இருவருமே பாடுகின்றார்!

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

இணைந்து நாமும் பாடிடுவோம்
ஏற்றமிகு தமிழகத்தைக் கண்டிடுவோம்
நாற்றமிகு சாதிப் பூசல் களைந்திடுவோம்
ஆற்றல்மிகு பாரதிக்கும் அவர் தாசர்க்கும்
விழா எடுப்போம்

விழா எடுக்கும் வேளையிலே...அவர்தம்
விழாக் கருத்தை தச் செவிமடுப்போம்!

செல்வாவின் இலட்சியம் வெல்க

சாதனைச் செல்வன்

தமிழ் நாட்டிலிருந்து இலங்கை மீது படையெடுத்துச் சென்றனர் தமிழர்கள்; வென்றனர். பல கால கட்டங்களில் இலங்கையை ஆண்டனர். இது வரலாறு அறிந்தவர்களுக்குத்தெரிந்தஉண்மை. சிங்களவர்களின் முதன்மையான வாலாற்று நூலான மகாவம்சத்தில் இச் செய்தி கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமன்று. இலங்கையில் நிலைத்து நின்று வந்த தமிழர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கை நகரையும், நல்லூரையும் தலைநகரங்களாகக் கொண்டு ஒரு வலிமை பொருந்திய முழு உரிமை பெற்ற தமிழரசை அமைத்து, ஆண்டுவந்துள்ளனர். இது வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட மறைகக முடியர்த உண்மை.

மேலும் சிங்களவர்களாலேயே எழுதப்பட்ட வரலர்ற்று நூல்களில் ஒன்று "கோகில சண்டேச" எனும் கவிதை நூல் ஆகும். செண்பகப் பெருமாள் எனும் தமிழ் மன்னன் பெற்ற வெற்றியைப் பற்றி இது மிக விரிவாகக் கூறுகிறது. அதுமட்டுமன்று; 'இராஜ வாளிய', 'நிக்கய சங்கிர கவ' ஆகிய நூல்கள் தமிழ் மன்னனின் ஆற்றலை அவனிக்குக் காட்டிடும் வண்ணம் சான்றுஒன்றை எடுத்துக் காட்டுகிறது.

யாழ்ப்பாணஆரியச் சக்கரவர்த்திகளுக்குச் சிங்கள மன்னர் திறை கொடுத்து வந்தார்களென்றும் அவர்களை அந்த அவலநிலையிலிருந்து நீக்கிய பெருமை அழகக் கோனர் என்ற தமிழருக்கேயுரியதுஎன்றும்அந்த நூல் கள்பறைசாற்றுகின்றன.

அந்த வீரம் செறிந்த மன்னன் அழகக் கோனர் சிறப்புக்கு அடையாளமாக அடைமொழி பலவற்றைச் சூட்டியிருந்தானென்றும் சொல்கின்றன. அடைமொழி என்பதால் சொல் அழகு அல்ல. காஞ்சி புரந்தர நிசங்க அழகேஸ்வர. போன்ற விருது பெயர்களைத் தாங்கி நின்றான்.

"உச்சநிலையில் இருந்த யாழ்ப்பாண அரசனின் ஆதிக்கத்தை அழித்த பெருமை அழகக் கோனர் என்ற தமிழ் மன்னனைச் சார்ந்ததாகும்' என்று வரையப்பட்ட வரலாறு 'நிக்கய போன்ற நூல்களில் காணக்கிடைக்கின்றது என்றுஜெர்மன் பேராசிரியர் 'கைகர்' கூறுகிறார்.

கி. பி. 1347 முதல் கி. பி. 1619-ம் ஆண்டுவரை யாழ்ப்பாணத் தமிழ அரசர்களுக்குச் சிங்கள அரசர்கள் திறை செலுத்திவைத்தார்கள் என்ற வரலாற்றுஉண்மையைத்திரை போட்டு மறைத்திட முடியாது.



அரிமாநிகர்த்த மன்னன் அழகர்கோனர் கோட்டையை கட்டினன். தமிழ்க் கொடியைப் பறக்கவிட்டான். தமிழ் வீரர்களைக் கொண்ட ஒரு பெரும் படையைத் திரட்டி நின்றான்" என்று சிங்கள வர வரலாற்று நூலான 'நிக்கய சங்கிரக' எனும் நூல் மேலும் செப்புகிறது

இலங்கைத் தீவு இருவேறு தேசிய இனங்களைக் கொண்டதாக இருந்து வந்துள்ளது என்று வரலர்றுகூறிவருகிறது. இலங்கை சட்ட மேதை மறைந்த மு. திருச்செல்வம் இவ் லரலாற்று உண்மைகளை ரயல் அற்பார் விசாரணையில் எடுத்துவர்தித்ததும் நீதிபதிகளாலும் மறுத்துரைக்கப் படாதது.அதுபதிவில்உள்ளது. தொன்று தொட்டு இருவேறு நாடுகளாக இறைமையுடன் திகழ்ந்து வந்தன தமிழ் ஈழ நாடு, சிலங்கா நாடு.

இந்தியர் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தில் இணைக்கப்பட்ட வரலர்ற்றைப்போல் போர்த்துக்கேசியர்கள்இரண்டு நர்டுகளாக விளங்கி வந்த சிலங்காவையும், தமிழ் ஈழ நாட்டையும் கைப்பற்றி ஆண்டு வந்தார்கள். பின்னர் பிரித்தானியர் இந் நாடுகளை நிர்வகித்து வந்தனர். கால ஓட்டத்தில் மக்கள் தொகையில் அதிகமாயுள்ள சிங்களவர்கள் இலங்கையை ஆளும் வர்க்கமாக ஆகிவிட்டார்கள் இலங்கையின் இன்றைய வரலாறு சிங்களவர் ஆதிக்கம் நிறைந்த வரலாறாக உலகப் படத்தில் காட்சிபளிக்கின்றது. உருவர்க்கப்பட்ட வரலாற்று உண்மைகளை உலகத்துக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

கூலிக்கு வேலை செய்கின்ற தொழிலாளிகளாக மட்டுமே இன்றைய ஈழத் தமிழர்களை இனவெறி ஆட்சி ஆக்கி வருகிறது. இலங்கையை வளப்படுத்திய ஈழத் தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக இழிநிலைக்குத் தள்ளியுள்ளனர் இலங்கையை ஆண்ட தமிழ் இனத்தைக் குடியுரிமையை இழக்கச் செய்திடும் கொடுமைக்குச் சிங்கள அரசு செய்து வருகிறது ஆண்ட தமிழினம் இன்றைய தினம் அடிமைப்படுத்தப் பட்ட நிலையிலுள்ளது.

ஆட்சி மொழியாக இருந்த தமிழை, ஆண்டு வந்த தமிழ் இனத்தை, அடிமை நிலைக்குத் தள்ளப் பட்ட நிலை மாறுவது எக்காலம்? இரண்டாந்தரக் குடிஉரிமைக்கு எடுத்தெறியப் பட்ட தமிழினம் ஏறுபோல் வீறுநடைபோடுவதுஎக்காலம் என்று ஏக்கப்பெருமூச்சு விட்டார் ஈழத் தமிழர் தந்தை செல்வா அவர் மறைந்து ஓராண்டு உருண்டோடி விட்டது.

அண்ணாவுக்குப்பின் வருங்கால தமிழகத்தை வாழ்விக்க வந்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞரைப்போல் தமிழ்த் தலைவர் செல்வாவிற்குப் பின் நாவலர் அமிர்தலிங்கம்' ஈழத் தமிழகத்தின் எதிர் காலத்தை நிர்ணயிக்க தலைமையேற்றுள்ளார். தமிழ் இனமே அவர் பின்னே தடங்கலின்றி வீறு நடை போடுகிறது.

காந்திய வழியில். பேரறிஞர் அண்ணாவின் அற வழியில் இன்று கூட்டணி தமிழ் ஈழத்தின் உரிமைக்குப் போராடிக்கொண்டிருக்கிறது. இன்று வரை தமிழர்கள் ஆயிரக்கணக்கான இளைஞர்களை, தொண்டர்களை இழந்துவிட்டிருக்கிறார்கள். சிங்களவர்கள் நடத்திய பயங்கரக் கலவரங்களில் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. சொத்துகள் சூறையாடப்பட்டுள்ளன. ஈழத் தமிழினம் எங்கு அழிக்கப்பட்டு விடுமோ என்று அச்சம் அடைகின்ற அளவிற்கு சிங்கள அரசு தமிழர்களைக் கொடுமைப்படுத்தியது; கொன்று குவித்தது. ஆயிரக்கணக்கான தமிழ்ச் சிங்கங்கள், விடுதலை வீரர்கள் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி தங்களுடைய இன்னுயிரை ஈந்தனர். அந்தத்தியாகிகளின் குருதி ஈழ மண்ணைச் சிவப்பாக்கியிருக்கிறது.

இலங்கை அரசின் போக்கினைக் கண்டிக்க ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பரித்துத் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் தலைமையில் பார் அதிர மாபெரும் ஊர்வலத்தை நடத்திக் காட்டினர் நம் தமிழகத்தில்.

தாய்த் தமிழகத்தின் உணர்வினை எடுத்துக் காட்ட இலங்கை அரசின் தூதுவரிடத்தில் தலைவர் கலைஞர் மனு ஒன்றினைத் தந்தார்.

இலங்கை அரசுக்கு தமிழர்களின் உணர்வு எட்டியது. கொடுமை செய்யும் போக்கைக் குறைத்தது. சிறிதே பணிந்தது. உலகின் தார்மீக ஆதரவு தமிழர் பக்கம் சார்வதை இலங்கைஅரசு உன்னிப்பாக எண்ணிப்பார்க்கிறது.

தமிழ் ஈழத்தந்தைசெல்வாவின் இலட்சியம் ஈடேறுகின்ற வகையில் எழுச்சித் தீ வேகமாகப் பரவிக்கொண்டு வருகிறது உலகின் பல நாடுகளில் வாழுகின்ற தமிழர்கள் தமிழ் ஈழ உரிமைக்குத் தங்களுடைய ஆதரவினைத் தந்து வருகிறார்கள்.

ஈழத்தின் தந்தை செல்வாவின் இறுதி இலட்சியம்இனிதே நிறைவேற உலகிலுள்ள தமிழர்கள் ஒன்றுதல் வேண்டும்.

"உலகத் தமிழர்களே ஒன்று கூடுங்கள்!" எனும் உயரிய கீதத்தை உரத்தக் குரலில் இசைப்போம்.

செல்வா நினைவு நாள்: கழகத் தலைவர் மடல்!

தாய்த் தமிழகம் உள்ளிட்டு உலகம் முழுவதும் வாழ்கிற தமிழ் மக்களின் நல்வாழ்வாழ்வு ஒன்றையே எண்ணித் துடித்துக்கொண்டிருக்கும் எனக்கு, தந்தை செல்வாவின் மறைவு எத்துணை அதிர்ச்சியை அளித்தது என்பதைத் தாங்கள் அறிவீர்கள்!

செல்வா சென்றுவிட்டார் எனக் கருதத் தேவையில்லை. அவர் தமிழர்களின் உள்ளத்தில் நிலையாக நின்று விட்டார் என்பதே உண்மையாகும்.

அவர் எண்ணங்கள் ஈடேற, தமிழ்க்குலம் தழைத்திடத் தொய்வின்றிப் பணிபுரிவதே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

அன்புள்ள,

மு கருணாநிதி

[தந்தை செல்வா அவர்கள் முதலாமாண்டு நினைவுநாளை ஒட்டி ஈழத் தமிழர் ஏடான "சுதந்திரன்" ஆசிரியர் தோழர் கோவை மகேசனுக்கு எழுதிய மடலின் பகுதி]

மேதினி போற்றும் மே தினம்!

பாட்டாளி மக்களின் விடுதலைவிழா — மேதினம்; நாடு அல்ல இதற்கு எல்லை; வாழ்வுக்காக — விடுதலைக்காக — உரிமைக்காகப் பாட்டாளிகள் அனைவரும் மேதினத்தைக் கொண்டாடுகின்றனர்!

நாளொன்றுக்கு எட்டு மணி நேரம் உழைப்பது—எட்டுமணி நேரம் குடும்பத்தினருடன் குதூகலமாக வாழ்வது — மற்ற எட்டு மணி நேரம் ஓய்வாக இருப்பது, — இந்தத் திட்டத்தை மேதினம் எடுத்துக் கூறுகிறது!

பாட்டாளிக்குப் புதுவாழ்வு அமைய வேண்டுமானல், இந்தத் திட்டம் தேவை'

உழைத்து அலுப்பதும்— உருக்குலைவதும் —ஓயாமல் உழைப்பதும் — வாழ்வின் சுவையையே காணாதிருப்பதும் — இன்று பாட்டாளியின் 'கதி'யாக இருக்கிறது; இதனல் தொழிலாளி. துயரின் உருவமாகிறான் — அடிமைப்படுகிறான் — 'வாழ்வு பெரியதோர் சுமை' என்று எண்ணுகிறான்'

இந்த நிலையை மாற்ற வேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்டவர்கள், எட்டு மணி நேர வேலைத் திட்டத்தை வலியுறுத்தினர்— அதனை வலியுறுத்தி ஆண்டுதோறும் மே மாதம் முதல் தேதியை விழா நாளாகக் கொண்டாட ஏற்பாடு செய்தனர்!

மேதினத்தை — பாட்டாளிகளின் விடுதலைக்காகப் பாடுபடும் நோக்கம் கொண்ட எல்லாக் கட்சியினரும் கொண்டாடலாம்.

— அறிஞர் அண்ணா



அமெரிக்காவில் ஒரு பாரதிதாசன்!

அமெரிக்க நாட்டிலே, ஒரு பாரதிதாசன் புதுக்கவி என்றும் புரட்சிக்கவி என்றும் கொண்டாடப்படுபவர். ஆனால், தமிழரில் தன்மானக் கோட்பாடுடையவர் புரட்சிக் கவி பாரதிதாசனைத் துவக்கத்திலேயே பாராட்டினர். அமெரிக்க நாட்டுப் பாரதிதாசனுக்கு, ஆரம்ப காலத்திலே அஃதும் இல்லை. இன்றும் நமது கவிஞரை இங்குள்ள ஏடுதாங்கிகள், ஏதேனும் கூறிடுவர் இறுமாப்புடன். அன்று அமெரிக்க நாட்டுக் கவிஞனையும் அவ்விதமே ஏளனம் செய்தனர். பின்னரோ புகழுரையைப் பொழிந்தனர்'

புரட்சிக் கவிஞர், வால்ட் விட்மன் என்பாரையே, நாம் அமெரிக்க நாட்டுப் பாரதிதாசன் என்றேம். அவர், கவிதை எப்படி இருத்தல் வேண்டும் என்பது பற்றித் தமது கருத்தைப் பல சமயங்களிலே கூறியிருக்கிறர். ஒரு கவி கவிதையின் இலட்சணத்தை விளக்குவது, அவரை நாம் அறியவும் அவர் மூலம் பொதுவாகவே கவிதாமணிகள் எவ்வண்ணம் இருப்பர் என்று தெரியவும், ஓர் வாய்ப்பளிக்கிறது. இதோ வால்ட் விட்மன், படப்பிடிப்பு! பாருங்கள், கவியின் உருவம் கவர்ச்சியுடன் காட்சியளிப்பதை.

வால்ட்விட்மனின் கருத்துகள் பல, பாரதிதாசனுடையவை போன்றே பழையகட்டுகளை உடைத்தெறியும் வெடிகுண்டுகள் போன்றுள்ளன. மக்களின் மேம்பாடே, விட்மனுக்குக் குறிக்கோள் மதத் தத்துவார்த்தங்களிலே அவர் மயங்கவில்லை; அவருடைய மணிமொழிகளிலே, சில இங்கு தருகிறேம்:

பழைய கட்டுப்பாடுகளையும் முட்டுப்பாடுகளையும் உடைத்தெறிந்து, கவிதைக்கும் வசனத்திற்கும் புதிய சுதந்தர ஓட்டந் தருகிறேன், ஆசான் எனினும் பாரேன்; அவன் எழுதிய வழக்கமான கருத்துக்களைத் தகர்த்தெறிவேன்.

உள்ளத்தை வெளிப்படையாக, சீர்தளைகளுக்குக் கட்டுப்படாமல், தைரியமாகச் சொல்பவனே கவிஞன். அவன், எதுகை மோனையின் அடிமையல்லன். சொல்லிற்கும், யாப்பிற்கும் இலக்கணத்திற்குங் கூட அவன் அடிமையல்லன். அவன் அவற்றின் தலைவன்; கருத்தில் முதல்வன், அவன் ஒரு சிருஷ்டி கர்த்தா!

எந்தப் பழைய வழக்கத்திற்கும் கொத்தடிமையல்லன். பழைமைக் குட்டையில் பாசி படர்ந்த பழக்கங்களை ஒழித்து அவன் வாழ்விற்கு ஒட்டமளிக்கிறன்.

உண்மைக்கவி ஒரு தீர்க்க தரிசி, அவன் பழங்கவிகளின் எதிரொலியல்லன்; பழைய வழக்கத்தின் பின்பாட்டுக்காரன் அல்லன்.

கவி வெறும் நீதிப்புரோகிதன் அல்லன். உவமையணிகளிலும், வர்ணனைகளிலும் விளையாடிக் காலங்கழிப்பவன் அல்லன்.

கவிகள், பிறர் அறிய முடியாத அருளாவேசத்தை விளக்குவோர் நிகழ்காலத்திற்படிந்த மகத்தான எதிர்காலச் சாயலின் கண்ணாடிகள். அங்கீகாரமின்றி, உலகிற்கு அறமளிப்போர் கவிகளே!

மனிதா! நீ யாருக்கும் தலைவணங்காதே: நிமிர்ந்து நட; கைவீசிச் செல்! உலகைக் காதலி! காதலில் கூசாதே! செல்வச் செருக்கரை, கொடுங்கோல் அரக்கரை, மதவெறியரை ஒதுக்கித்தள்ளி, மனச் சாட்சியைத் துணைகொண்டு நட! ஏழைகளிடம் இரக்கம் காட்டு. தொழிலாளருக்கு ஆறுதலளி. பாட்டாளியிடம் பரிவுகொள். தாராளமாக உதவு. உழைப்பை மதி: ஊருக்கு உதவு! உனக்கு எட்டாத கடவுளைப் பற்றித் தெரிந்ததாகப் பிதற்றுதே!

எதையும் சிந்தித்துப் பாரீர். யாருக்கும் நீவிர் தாழ்ந்தவரல்லீர்! எவர்க்கும் அடிமையல்லீர்! நீவிரே தலைவர்: தலை நிமிர்த்திடுக!

பண்டு நடந்த அற்புதங்கள்? வெறும் பொய்கள். நம்பாதீர்! அகம்பாவத் கொடுங்கோலரை வீழ்த்துவீர் வீழ்ந்தோரை உயர்த்துவீர்!

இனி உலகில் புரோகிதர் சாமியார் அதிகாரம் நடக்காது. அவர்கள் காலம் மலையேறிப் போய்விட்டது ஒவ்வொருவனும், தனக்குத் தானே உபதேசியாகிவிடுவான். உள்ளம் உணர்ந்த உரத்துடன் வாழ்வான். பழைய கட்டுப்பாடுகள் ஒழியும்!

மனிதா! எதற்கும் அஞ்சாதே! ஆற்றலுள்ள வெற்றி வீரனென விளங்கு! வாழ்வை நடத்த முனைந்து நில்!

நமது இன்றையச் சமுதாயம், பூச்சழகில், பேச்சழகில் வெளி வேடத்தில், தன்னலப் போட்டி பொருமையில், கலகலத்துப் போன அந்தநாள் வழக்கங்களின் மோகம் கொண்டு, உள்ளே உரமற்று, ஒன்றுமின்றிக் கிடக்கிறது. இந்நிலை மாறவேண்டும்.

நம் இலக்கியங்கள், வெறும் வார்த்தைக் கோவையாக உள்ளன. இலக்கியமே, நாட்டினருக்கு ஊட்டமளிப்பது. இலக்கியம் வாழ்வின் விளக்கமாய், உயிருடன் ஒட்டுவதாய் இருத்தல் வேண்டும்.

உடலுறுதி, உள்ள உரம், கருத்துப்பொலிவு கருத்து விடுதலை கலைப்பண்பு பயன்தரும் தொழில் ஊக்கம், நல்ல நட்பு, ஈகை, சுரண்டுவதற்குப் பயன்படாத (மனிதத்) தொடர்பு, சாதிமதப் பிடிவாதமற்ற வீறுநடை, பணத்திமிரற்ற உயர்வு, இவையே குடியரசின் குணங்கள்! குடியரசு, பொருளைவிட மனிதனை மேன்மையாக மதித்திட வேண்டும்.

நான் உலக மக்களில் ஒருவன்! செருக்கற்றவன்! கள்ள

★ அறிஞர் அண்ணா ★

மற்ற வெள்ளை உள்ளம்! எவருடனும் செல்வேன்! கை கோர்த்து! களிப்புடன் வானத்தை நோக்கி வணங்கி வரம் கேட்பதில்லை. உழைத்து வாழ்கிறேன் ஊரை ஏய்த்தல்ல. இருப்பதைக் கொடுக்

கிறேன் மற்றவர்க்கும். மக்களின் தோழன் நான். புலவர்கட்கல்ல பாடங்கேட்டது எனது ஆசிரியர்களுக்கு நான் போதிக்கிறேன்

காற்று எங்கும் வீசும், நானும் அப்படியே. எங்கும் உலவுவேன். ஏழை பணக்காரன், புண்யமூர்த்தி பாபாத்மா பத்தினி பரத்தை, ஆண்டான் அடிமை என்று வேறுபாடு எனக்கு இல்லை. பருவமழை போல் பலருக்கும் பயனளிப்பேன்.

மனிதரனைவரும் எனக்கு ஒன்றே! எவருக்கும் அஞ்சேன். எதற்கும் அழேன், எதையும் தொழேன். சடங்கும் சாமி கும்பிடுதலும் எனக்கில்லை. என்னை நான் உணர்ந்தேன்! தொல்லையில்லாத விடுதலை பெற்றவன் நான்! எந்தக் குருவிடமும் மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை. நான் மோட்சந் தேடவில்லை,

எனக்குத் தெரிந்த உலகம் ஒன்றே அஃது அகண்ட உலகினும் பெரிய உலகம், அது நான்! நானே!

முணு முணுப்பதில்லை எதற்கும், பாவத்திற்கு அழுவதில்லை, யாரையும் தொழுவதில்லை. கடவுளையும் குருக்களையும் பற்றிப் பேசிக் காதைத் துளைப்பதில்லை. இல்லை என்ற கவலையில்லை. சேர்த்துப் பூட்டும் பித்தமில்லை. முன்னேருக்குப் பணிவதில்லை; சடங்கு சங்கடம் எனக்கில்லை.

எனக்குக் கட்டில்லை. காவலில்லை, சட்டதிட்டமில்லை.

பிறர் புண்ணானால் நானும் புண்ணாவேன். மற்றவர் மகிழ, நானும் மகிழ்கிறேன்.

தத்துவ ஏடுகளைவிட என் வலக்கையருகே காலைக் கதிரோன் பூத்திடுவது எனக்குக் களிப்பூட்டுகிறது.

போனவை போகட்டும்! புத்துலகு, பேருலகு காண்போம். நாம் காண பவண்டிய உலகு. தொழில் உலகு. உறுதி உலகு; அதற்கு வழி காண்பீர்!

நரகம் எனும் பூச்சாண்டி எனக்கு வெறும் தூசு. மோட்சம் எனும் மாயவலை எனக்கு அனுமாத்திரம்!

உயரிய கருத்துகளே!

மனிதக் குறிக்கோள்கள்!

வீரமே! ஆர்வமே! ஆற்றலே!

நீவிர், எனக்கு ஆண்டவராகுக!

இதுபோலப் பரம்பரைக்காரர் பயந்தோடும்படிப் பாடினர் புரட்சிக் கவிகளை விட்மன்! அவரை ஒரு கவி என்று ஏற்க மறுத்தனர்; கவலைகொள்ளவில்லை கொடுமையைக் காய்ந்தார்! மடமையைச் சாடினர்! மணிமொழியை வீசினர்; ஏழ்மைகண்டு பயந்தாரில்லை, ஏளனம் கண்டு சலித்திடவில்லை! எதிர்ப்புக்கு அஞ்சவில்லை!

வால்ட் விட்மன் ஒரு வம்பன் என்றனர்; வாதாடவில்லை! அவன் ஓர் அபாயக் குறி என்றனர்! 'ஆம்' என்ருன். அவனை வெறுத்தனர், கண்டித்தனர்; ஆனுல். அவனைத் தங்கள் உள்ளங்களிலிருந்து மட்டும் பெயர்த்தெடுத்துவிட முடியவில்லை; அவனுடைய கவிதைகள், உள்ளத்திலே ஊடுருவிச் சென்றுவிட்டன. தம்மையுமறியாமல் அவன் வயத்தராயினர்.

அமெரிக்கா, அங்கு தோன்றிய பாரதிதாசனைப் போற்றலாயிற்று. அவனுடைய 120ஆம் ஆண்டு விழாவை ஆனந்தமாகக் கொண்டாடிற்று நியூயார்க்கில் வால்ட் விட்மனுக்குச் சிலை அமைத்தனர்!

நாம், நமது பாரதிதாசனுக்குச் செய்தது என்ன? ஏதும் செய்ய வகையற்றவரா நாம்? என்னை நான் இக்கேள்வி கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு கணம் எண்ணிப் பாருங்கள் பாரதிதாசன் அங்கு பிறந்திருந்தால்?

எழுதி அனுப்பியவர்:
— இராவத்தூர்
இரா. கு. இராமசாமி.

இணைப்பு மொழி - சில உண்மைகள் !

[சென்ற இதழ் தொடர்ச்சி]

ஒரு பொது மொழி இருந்தால்தான் நாட்டில் ஐக்கியமும், ஒற்றுமையும் பலப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் நிலைமை என்ன? இன்னாளில் இக் கருத்தும், இந்தியும், இந்தியாவின் ஐக்யத்திற்கு பெருத்த ஊறு விளைவிக்கும் என்றல்லவா அஞ்சப்படுகின்றது! இந்தியா ஒரு சிறு நாடல்ல. இது ஒரு துணைக் கண்டம். பல்வேறுபட்ட தட்ப வெட்ப நிலைகள் பல தரப்பட்ட மக்கள், மொழிகள் இவற்றின் கதம்பம், குவித்து வைக்கப்பட்ட நெல்லிக்கனி போன்றது. எந்த ஒரு சிறு இடையூறும் நிலைமையை முற்றிலும் மாற்றிவிடும். எந்த ஒன்றினையும், எண்ணிக்கையில் அதிகமான மக்களுடன் தொடர்பு கொண்டுள்ள காரணத்தால் அரியாசனத்தில் அமர வைக்க முயல்வது அறிவீனமாகும்; தவறான கருத்தாகும்.

இந்தியாவில் அதிகமான இந்துக்கள் [234,837,669]இருப்பதனால் ஒருமைப்பாடு வேண்டி மற்ற அனைவரையும் இந்துக்களாக்க மாற்ற இயலுமா? அது மத உரிமையைப் பாதிப்பதாக ஆகாதா? மக்கள் கிளர்ந்தெழ மாட்டார்களா? மத உரிமை போன்றது தான் மொழி உரிமையும். இன்னும் சொல்லப் போனால் மத உரிமையைவிட மொழி உரிமை அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. உயிர்நாடிபோன்றது. ஒரே மதமாக இருந்த போதிலும் பேசும் மொழியின் அடிப்படையில்—உருது பேசுவோர் எனவும். வங்காளி பேசுவோர் எனவும்—வங்காள தேசமும், பாக்கிஸ்தானும் பிரிந்ததைவிட இதற்கு வேறு ஒரு உதாரணம் தேவையோ? ஆகவே ஆளுவோருக்கும், அதிகார பொறுப்பில் உள்ளவர்களுக்கும் பொறுப்பும், சகிப்பும், பொறுமையும் கவனமும் இதனில் வேண்டும்.

எங்கப்பன் குதிருக்குள் இல்லை. இல்லவே இல்லை! என்பதுபோல் 'இந்தித் திணிப்பு இல்லை. இல்லவே இல்லை' என அடிக்கடி சொல்கிறார்கள் அண்மையில் தனி அமைப்பாக ஆக்கப்பட்ட தொலைக்காட்சி, 'தூரதர்சன்' என்றே அழைக்கப்படுகின்றது. சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தில் தொடக்கத்தில் ஒரு மாதத்தில் இரண்டு இந்திப் படங்களும், ஒரு தெலுங்குப் படமும், ஒரு கன்னட அல்லது மலையாளத் திரைப்படமும் திரையிடப்பட்டு வந்தன. பிறகு அதனை மாற்றி ஒருமாதத்தில் நான்கு வாரங்களும் இந்திப் படமே காட்டப்படுகின்றன. மத்திய அரசு ஊழியர்களில் இந்தி

வீரசோழன்

யைப் படித்துத் தேர்ச்சியடையும் ஊழியர்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் வழங்கப்படுமெனப் பகிரங்கமாக அறிவிப்புகள் வெளியிடுகின்றார்கள். ஆயுள் காப்பிட்டுக் கழகத்தில் [L. I. C] வெளியிடப்பட்ட சுற்றறிக்கை எண் ZDB/16/1977 தேதி 1—9—77 இதற்கோர் எடுத்துக்காட்டாகும். அலுவலக நேரத்தில் இந்திப் பயிற்சி வகுப்புக்கு செல்ல அனுமதி, அதற்கான பேருந்து கட்டணம், தேர்வுக் கட்டணம் முதலியன இலவசமாக வழங்கப்படுமெனவும், தேர்வு பெறுவோர் வெகுமதித் தொகை 250-லிருந்து 500 வரை பெறுவார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்சமயம் சென்னையில் இதற்கொப்ப வாரத்தில் 3 நாட்கள் இந்தி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இரயில்வேயில் முன்பு பெயர் பேட்ஜில் ஆங்கிலம் மட்டுமிருந்தது. இப்போது இந்தியும் சேர்க்கப்படுகின்றது. ஆனால் தமிழ் சேர்க்கப்படவில்லை. இதற்கு இரயில்வே தொழிலாளர் முன்னேற்ற சங்கம் மதுரையில் கூடி எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மத்திய அரசாங்க சிவில் விமான போக்குவரத்துத் துறையில் அரசாங்கப் பணிகளை இந்தியிலேயே நடத்த வேண்டுமென அந்த இலாகாவின் அதிகாரியும், அமைச்சரும் அறிவித்திருக்கிறார்கள். அதை மேற்பார்வையில் ரூபாய் 1500 முதல் 2000 வரை சம்பளத்தில் அதிகாரியும் நியமிக்கப்பட இருக்கிறாராம். இது குறித்து தமிழகச் சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானமே வந்துள்ளது. புதுவை மாநிலத்தில் மாவட்டக் கல்வி அதிகாரியின் 23—11—77தேதியிட்ட தாக்கீதின்படி ஆறுவது—ஏழாவது வகுப்புகளில் வாரத்தில் இரண்டு மணி நேரம் இந்திப்பாடம் நடத்தப்பட வேண்டும். தமிழகத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் மாலை நேர இந்தி வகுப்புகள் நடத்த நடப்புக் கல்வி ஆண்டில் 5 இலட்சம் ரூபாய் மானியமாக மத்திய அரசு வழங்கியுள்ளது. சட்டமன்றத்தில் நுணுக்கமான கேள்விகளை தொடுப்பதில் புலியான, பாராளுமன்ற பணித்துறையின் வெள்ளிப் பதக்கம் பெற்ற உறுப்பினர் கிட்டப்பாவின் வினாவுக்கு பதிலளிக்கும்போது கல்வி அமைச்சர் அறிவித்த அறிவிப்பாகும் இது.

இவைதவிர இம் மாதம் 13-ஆம் தேதி டெல்லியில் தலைமை அமைச்சர் கலந்து கொண்ட 'கேந்திரிய இந்தி சமிதி'கூட்டத்தில் நிலைமையை மேலும் மோசமாக்கும் முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மத்திய அரசு துணைச் செயலாளர்கள் இந்தி படித்துவிட வேண்டுமென்றும், மத்திய அரசில் இந்தியைப் பரப்ப அதிகமான பதவிகள் ஏற்படுத்தப்படவேண்டுமென்றும் இந்தி சுருக்கெழுத்தாளர்கள் மட்டுமே இந்தி மொழி தெரிந்த அதிகாரிகளிடம் வேலைக்கமர்த்தப்பட வேண்டுமென்றும், இந்தி மொழி தட்டெழுத்து இயந்திரங்களை அரசே பொதுத்துறையில் தயாரிக்க வேண்டுமென்றும், இந்தி மொழி பயிற்சிக்கு தனி பயிற்சி நிலையம் ஏற்படுத்த வேண்டுமெனவும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன [இந்தியன் எக்ஸ்பிரஸ் 14-4-78] இப்பொழுது சொல்லுங்கள். இதற்கெல்லாம் என்ன பொருள்? இந்தி திணிக்கப்படவில்லை! திணிக்கப்படவே இல்லை என்பது தானா?

மும்மொழித்திட்டம் இல்லாமையால் இழப்புக்கு உட்படுவது நாம்தான் எனச் சிலர் கருதுகின்றனர். வட இந்தியாவில் மும்மொழித் திட்டம் எந்த அளவில் செயல்படுகின்றது? இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் வேறு எந்த மொழியினையும் கற்க விரும்புவதில்லை; அவசியமுமில்லை. அவர்கள் தமிழோ தெலுங்கோ கற்பதனால் எந்தவிதப் பயனும் இல்லை. ஆகவே அவற்றைக் கற்க முன்வருவதில்லை. அதே நேரத்தில் ஆங்கிலத்தை அறவே வெறுக்கிறார்கள். ஆகவே அவர்கள் கற்பதெல்லாம் அவர்களின் தாய்மொழியான இந்தி மட்டுமே. ஆனால் இங்கு தாய்மொழியுடன் ஆங்கிலமும் கற்கிறார்கள். ஆகவே குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுவது நாமல்ல. அவர்களே! ஆனால் இந்தி ஆட்சிமொழியாக அமையுமானால் அவர்களே முழு ஆதாயம் பெறுவார்கள். அகில இந்திய அரசுத் துறைகளுக்குத் தேர்வு செய்யும் கழகம் இன்றும் போட்டித் தேர்வுகளை நடத்தியே முடிவுகளைச் செய்கின்றது. போட்டிகளில் முதலிடம் வகிப்பவர்கள் மட்டுமே அலுவலர்களாக அமர்த்தப்படுவார்கள். இந்தி மட்டிலும் இந்திய இணைப்புமொழி என்றாகி விட்டால் நம் நிலை என்ன? யாருடன் யார் மோத இயலும்? தாய்மொழியில் கருத்துக்களைச் சொல்வதைவிடப் பிறமொழியில்சொல்வதுமிகக் கடினம். அம்மொழி அவர்களின் தாய் மொழியாதலால் அவர்களுடன் பொருத, போட்டியிட நாம் அருகதை அற்றவர்கள் ஆவோம். நம்மை வென்று நன்மை பெற்று நல்ல உயர்வினை எய்திடுவர். அதற்கான வாய்ப்பினைப் பெற்று வளங்களைப் பெருக்கிடுவர். நாடெங்கும் வேலையில் அமர்த்தப்படுவர்.

நம்முடைய இக்கால மழலைகளை, எதிர்கால இளைஞர்களை எதிர்நோக்கி நிற்கும் ஒரு பரிதாபகரமான நிலை இது. ஆகவேதான் நாம் கேட்கிறோம்; இந்தியுடன் ஆங்கிலத்தையும் இணைப்பு மொழி ஆக்க வேண்டும் என்று' முன்னாள் பாரதப் பிரதமர் நேருவின் உறுதிமொழிகளுக்கு உறுதியான சட்ட வடிவம் தரப்படவேண்டும். 'நம் தமிழ் எங்கும் செங்கோலோச்ச வேண்டும். எங்கும் எதிலும் தமிழ் இருக்க வேண்டும், சொந்த நாட்டில். தாய் தமிழகத்தில்-தபால்தலையில், நாணயத்தில் (அண்மை நாடான இலங்கை போல்) தமிழ் இருக்க வேண்டும்' என்றெல்லாம் கேட்கவில்லை. நினைக்கக் கூட இல்லை. அதற்கு நமக்கு அருகதையும் இல்லை. நாம் வேண்டுவதெல்லாம் ஆங்கிலத்தையும் இந்தியாவின் இணைப்பு மொழியாக வைத்திருங்கள் என்பதுதான். எங்களுக்கு இந்தியைவிட ஆங்கிலத்தின் அறிமுகம் அதிகம். அனுகூலமும் அதிகம், பயனும் அதிகம்.

கனல் முட்டை!

-: கவிஞர் குடியரசு :-

மதங்கப்பி மனந்தப்பி, மானந் தப்பி
வரலாறு பண்பாடு முழுதும் தப்பி
முதல்மொழியாம் தமிழ்மொழியே எங்கோ தப்பி
முனைமுறிந்து போய்க்கொண் ருந்த வேளை

புதுவையிலே புறப்பட்ட புயலைத் தானே
புரட்சிப்பா வேந்தனவன் விதைத்தான்! அன்னோன்
எதுகையெலாம் எரிமலைகள் மோனை எல்லாம்
எதிரிகளைக் குலுக்குகின்ற பூகம் பங்கள்

பாட்டாலே படையெடுத்தான் பக்தி என்ற
பனித்துளியைப் பகுத்தறிவால் உறிஞ்சி நின்றான்
நாட்டுக்கு அவன்தந்த தமிழி யக்கம்
நடமாடும் தமிழ்ச்சிறுத்தை! தமிழர்க் கென்றே

கவியுலகைத் திருப்பிவிட்டான்! புழுவை பூச்சைக்
கனல்முட்டை இடுவதற்கு ஆணை இட்டான்
அவியாத ஈரோட்டு நெருப்பை ஊத
அவனைப்போல் வேகமான காற்றே இல்லை!

நிம்மதியில் படிக்கின்ற கவிதை வேறு
நிலாமுற்றக் கவிதைகளும் உண்டு! ஆனால்
சம்மட்டி யால்கவிதை அடிதது சாதி
சக்கரத்தை மட்டுமல்ல குப்பைக் கூள

வைதீக வண்டியையே சாய்த்து விட்டான்
வானவில்லில் யாப்பெடுத்து பாடல் செய்தால்
கைதிகட்கு விடுதலைநாள் எந்நாள்? என்றே
கைவிலங்கை தன்பாட்டால் நொறுக்கிப் போட்டான்

எத்துறையை அவன்தொட்டு மிச்சம் வைத்தான்!
எழுச்சிக்கு அவன்காட்டும பரப ரப்பு—
முத்திரைகள்! அவன்மட்டும் இல்லை என்றால்
முத்தமிழே கால்முறிந்து நொண்டும் அன்றோ!

தூரத்து விண்மீன்போல் அவனொ ளிர்ந்தான்
துயிலெழுப்பிக் கொண்டிருந்த காலச் சேவல்
சாரத்தை விட்டுவிட்டு சக்கை யானான்
சாவுக்குத் தேவையான கவிதை யானான்

தொடர்ந்திருக்கக் கூடாதா என்று நாடு
தூயவனின் வாழ்நாளைக் கோரும் போதே
படர்ந்துவிட்டான் பஞ்சபூதப் படுக்கை மீது
பாட்டுலகம் கண்ணவிந்து தடுமா றிற்று!

எங்களது இரவுகளில் நிலவு இல்லை
எங்கேஎம் இளவேனிற்! கட்ட விழ்ந்து
எங்கேதான் சிதறியது புரட்சி யாப்பு!
இலக்கணமே தனை அறுத்துக் கொண்டா போச்சு!

பாவேந்தா இப்போது நீயி ருந்தால்
பாய்போட்டுத் தூங்கிடுமா அந்தக் கூட்டம்
நாவேந்தன் அண்ணாவும் இல்லை! இந்த
நாட்டுக்கும் பாட்டுக்கும் தலைவ ரில்லை

கோடையிலே நீபிறந்தாய்! மடிந்தாய்! உன்றன்
கொள்கையிலே நெருப்பிருத்தல் இயற்கை தானே
மேடையிலே வீசிநின்ற தென்றல் காற்றே!
மிகுவணக்கம் செய்கின்றோம் நன்றி உள்ளோர்.

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை. மதுரை
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முருக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 26, மேலமாசி வீதி, 70, சுவாமி சன்னதி
12, அழகர்கோவில் சாலை, 72, C டவுன்ஹால்ரோடு, மதுரை.

இன்றைய நினைவுக்கு அன்றைய நிகழ்ச்சி

பாவேந்தருக்கு நாவேந்தர் நடத்திய நல்விழா!

1946 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் இருபத்தெட்டாம் நாள். தமிழர் வரலாற்றுப் பொன்னேடுகளில் வைர வரிகளாகப் பதிந்த நாளாகும்.

ஆம்! அன்றுதான் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசனுக்குத் தமிழ் மக்கள் பொன்னுடை போர்த்திப் பொற்கிழி வழங்கிய நன்னாளாகும்.

தமிழ் நாட்டில் ஒரு தமிழ்க் கவிஞருக்கு அவர் வாழ்நாளிலேயே பாராட்டு விழா நடாத்திப் பண முடிப்பும் அளித்துப் பெருமைப்படுத்திய முதல் நிகழ்ச்சியும் அதுதான்.

பள்ளித் தமிழாசிரியராகப் பணிபுரிந்து கொண்டே பகுத்தறிவுப் பாமழை பொழிந்து கொண்டிருந்த பாவேந்தர் தமது பணியிலிருந்து ஓய்வு பெற்றார்; தொடர்ந்து வருவாய்க்கு வழியில்லை, தமிழ்ப் புலவர்களுக்கே யுரிய வறுமை, பாவேந்தரை மட்டும் விட்டு விடுமா?

அந்த நேரத்தில்தான் 'நம் கவிஞருக்கு ஏதேனும் செய்தாக வேண்டும்' என்ற எண்ணம் அன்றைய திராவிடர் கழகத்தின் தளபதியாகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் ஏனைய இயக்கத் தோழர்களுக்கும் ஏற்பட்டது

'புத்தறிவை நாளும் புதிய உணர்வின் விளைவை நத்தும் தமிழுலகில் நற்புலமை வித்தகனும் பாரதிதாசன் பாட்டின் பாராட்டுப் பொற்கிழியின் சீரதிகம ஓங்கச் சிறந்தது.'

'பாராட்டு' என்று எண்ணி இந்தப் பாடலை வழங்கினார் பசுமலை நாவலர் சோமசுந்தர பாரதியார்!

தமிழர்கள் இதனை-அவர் இட்ட கட்டளையாக ஏற்று நிதி திரட்டி, சீரும் சிறப்புமுறத் தமிழகத் தலைநகரில் பாவேந்தருக்கு விழா எடுத்துப் பாராட்டிப் பொன்னுடை போர்த்திப் பொற் கிழியும் அளித்து மகிழ்ந்தனர்!

சென்னையில் உள்ள வெளியூர்ப் பேருந்து நிலையத்திற்கெதிரில் அமைந்திருக்கும் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி விளையாட்டுத் திடலில் தான் விழா நடைபெற்றது.

அதற்கு முன் சென்னை கண்டிராத கூட்டம்! செந்தமிழர் சிந்தையெலாம் தேன் பெய்த கூட்டம்! எந்தக் கவிஞருக்கும் கிடைத்திராத பேறு!

"எங்கள் கவிஞருக்குத் தமிழகம் காணிக்கை செலுத்துகிறது என்று விழாவிலே குழுமியிருந்த அத்தனை பேரும் வியந்து மகிழ்ந்து பூரித்துப் பெருமையுடன் பேசிக் கொண்டனர்!

அந்தக் கூட்டத்தைக் கண்ட சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப் பிள்ளை. 'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்' என்று வருணித்தார்.

நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார், "முப்பதாயிரத்துக்குக் குறையாது என்று நம்புகிறேன்" என்று கூட்டத்தை நோக்கிக்கூறினார்!

"என் வாழ்நாளிலே, இது வரையில் இத்தகைய வைபவத்தை நான் கண்டதில்லை" என்றார் நாவலர் பாரதியார்!

பாவேந்தரின் 'வெண்ணிலாவும் வானும்போல' என்ற பாட்டை, இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் பாட-- அந்தச் செந்தமிழ் இசைக்குச் சித்திரமாக விளங்கியது அன்றைய விழா!

குளிக்கரை பிச்சையப்பா அன்று வாசித்த குளிர்ச்சியான நாதசுர இசையைப் போன்றே இருந்தது— அன்று தமிழ்த் தலைவர்களின் உரைகள்!

கட்சிகளின் வேற்றுமைகள் மறைந்தன; 'ஒரு நாள் மட்டுந்தானே' எனலாம்; ஆம்; ஆகையினால்தான் அது திருநாள் ஆயிற்று!

நாவலர் பாரதியார் விழாத் தலைமை பூண்டு முன்னுரை மொழிந்தபின், கவிஞரைப் பாராட்டி அறிஞர் பலரும் உரையாற்றினர்.

பழம்பெரும் நீதிக் கட்சித் தலைவரும்–சென்னை நகர மேயராக இருந்தவருமான இராவ் பகதூர் என் சிவராஜ், பொதுவுடமைக் கட்சித் தலைவர் ப. ஜீவானந்தம், மகாவித்துவான் மே வீ.வேணுகோபால்பிள்ளை. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார், சொல்லின் செல்வர் இரா.பி. சேதுப்பிள்ளை, இரா. நெடுஞ்செழியன், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

இடையிடையே இசைச் செல்வர் திருவாரூர் டி. வி நமச்சிவாயம் பாவேந்தரின்

பாடல்களைப் பாடி மகிழ்வித்தார்.

விழாத் தலைவர் பாரதியாருக்கு நிதிக்குழுவின் சார்பில், காஞ்சித் தோழர் சி. வி. எம். அண்ணாமலை வரவேற்பு மடல் படித்தளித்தார்.

சென்னை திராவிடர் கழகத்தின் சார்பில் சி.டி டி. அரசும். புலவர் கழகத்தின் சார்பில் க. அன்பழகனும் (இன்றைய நமது பொதுச் செயலாளர் பேராசிரியர்தான்) திராவிட மாணவர் கழகத்தின் சார்பில் ஈ. வி கே சம்பத்தும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பில்இரெ. இளம்வழுதியும், இசை நுகர்வோர் கழகச்சார்பில் சுந்தரமூர்த்தியும் கவிஞருக்கு வரவேற்புரை படித்தளித்தனர்.

மேலும் பல வரவேற்பு மடல்கள் வந்தவண்ணமிருந்தன. அவற்றையெல்லாம் படிக்க நேரமின்மையால் — பெயர்களை மட்டும் கூறி–கவிஞரிடம் அளித்தனர்.

அன்றைய 'குயில்'இதழின் ஆசிரியர் திருவாரூர் டி என். இராமன் அவர்களால் உருவாக்கப்பட்ட 'கவிஞர் விழா மலரை ஜலகண்டபுரம் ப கண்ணன் கவிஞரிடம் அளித்தார்.

பிறகு அண்ணா அவர்கள் புரட்சிக் கவிஞருக்குப் பொற்கிழி அளித்தார்.

காஞ்சி அ. க. தங்கவேலர் கவிஞருக்குப் பொன்னுடை போர்த்தினர்.

புரட்சிக் கவிஞர் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில்,

"அஞ்சாதே' உண்மையை உணர்த்திடு உள்ளம் திறந்து பேசு' தமிழில் பேசு — எழுது! தயங்காதே எதிர்ப்புக்கு மலைக்காதே' எதிர்ப்பு உன் சக்தியை வளர்த்துவிடும்!

"எனக்கு சிறுபிள்ளைப் பருவமுதற் கொண்டே எதிர்ப்பு உண்டு – நான் அஞ்சவில்லை! என்ன அதன் பலன்? இதோ ரூ 25 ஆயிரம்''

என்றார் கவிஞர்!

இருபத்தையாயிரம் தமிழர் எதிரே வீற்றிருந்தனர்; மகிழ்ச்சிப் பெருக்குடன் நாவலர் பாரதியார் தமிழரை வாழ்த்தினார்!

முடிவுரையில் தமிழுக்கு இனி 'நற்காலம்' என்றார்— பூரித்தார்-மகிழ்ச்சி மதுவுண்டு களித்தார்!

இறுதியாக அறிஞர் அண்ணா அவர்கள் நன்றி கூற- பிற்பகல் 4 மணிக்குத் தொடங்கிய விழா இரவு 10-45 மணிக்கு இனிது முடிவுற்றது.

பாரதிதாசன் நிதி திரட்டும் பணியை நாமக்கல் தோழர்கள் என். கிருஷ்ணராசு, மு. செல்லப்பன், கே. கருப்பன் ஆகிய மூவரும் தொடங்கினர்.

திருவாரூர் டி. என். இராமன், சலகண்டபுரம் ப. கண்ணன் ஆகிய இருவரும் செயலாளர்களாக இருந்து அரும் பணியாற்றினர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பொருளாளராகப் பொறுப்பேற்று விழாவினைச் சிறப்பாக நடத்தி முடித்தார்கள்.

அந்தக் காலத்தில் இருபத்தையாயிரம் ரூபாய் நிதி திரட்டுவது என்றால் எளிதான காரியமா?

இப்பொழுது அதனை நினைத்துப் பார்த்தால்கூட 'எப்படி முடிந்தது' என்று மலைக்கத் தோன்றுகிறது.

அப்போது தந்தை பெரியார் அவர்கள் திராவிடர் கழகத்துக்கு ஓர் இலட்ச ரூபாய் நிதி திரட்டத் திட்டமிட்டு, ஒவ்வொரு மாவட்டமும் இவ்வளவு ரூபாய் திரட்டித் தர வேண்டும் என்றும் அளவு நிர்ணயித்து அறிவித்திருந்த நேரம். கழகத் தோழர்கள் முழு மூச்சுடன் நிதி திரட்ட வேண்டும் என்பது பெரியாரின் கட்டளை.

அந்த நேரத்தில் அண்ணா அவர்கள், கவிஞருக்கு நிதியளிக்க வேண்டிய அவசர, அவசியத்தை உணர்ந்து, நிதி திரட்ட முனைந்ததால், ஐயா அவர்களுக்குக்கூட அண்ணா அவர்களின்மீது வருத்தம் ஏற்பட்டதாகச் சொல்லப் பட்டது.

ஐயாவின் கோபத்துக்காளான நிலையிலும் அண்ணா அவர்கள் விடாமுயற்சியுடன் புரட்சிக் கவிஞருக்கு நிதி திரட்டி வழங்கியது, கவிஞரின் தொண்டு தமிழகத்துக்கும், நமது இயக்கத்துக்கும் எவ்வளவு இன்றியமையாதது என்பதை உணர்த்துவதற்காகத்தான்.

தமிழினத்தைத் தட்டியெழுப்பித் தன்மான உணர்வூட்டித் தலைநிமிர்ந்து நடக்கச் செய்த தந்தை பெரியாரும் நம்மிடையே இல்லை: பேரறிஞர் அண்ணாவும் இல்லை; புரட்சிக் கவிஞரும் இல்லை.

அவர்கள் நமக்காக விட்டுச் சென்றுள்ள கருத்துக்களும் எழுத்துக்களும்தான் நமக்கு வழிகாட்டிகள்.

அவர்கள் காட்டிய வழியில் நம்மையெல்லாம் இன்று வழிநடத்திச் செல்லும் தமிழினத் தலைவராம் டாக்டர் கலைஞர் அவர்கள் காட்டும் வழி நடப்போம்; அவர் கூறும் மொழி கேட்போம்'' என்று இன்றைய இளந் தலைமுறையினர் சூளுரை ஏற்கவேண்டும். இதுவே, புரட்சிக் கவிஞருக்கு நாம் காட்டும் நன்றியுணர்வாகும். ★



பாவேந்தர் பாரதிதாசனுக்கு நாவேந்தர் அண்ணா பொற்கிழி வழங்கிய காட்சி (28—7—1946)



செத்தவள் கதை

கருணாநிதி

"முன்னையிட்ட தீ முப்புரத்திலே!

பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே!

அன்னையிட்ட தீ அனந்த அடுப்பிலே!

யானுமிட்ட தீ யானை மார்க்கிகரட்டிலே! மூள்க மூள்கவே!''

யாரப்பா 'நவீன பட்டினத்தார்' என்று கேட்கத் தூண்டும்.

பட்டினத்தாருமல்ல...... கிட்டினத்தாருமல்ல... எல்லப்பன் தயாரித்த வேடிக்கை விருத்தம்.

சிகரெட்டில் புகை கிளம்புவதற்குள் செல்லாயி கலகலவெனச் சிரித்துவிட்டாள். முதல்நாள் இரவுதான் அவள் பட்டினத்தார் படம் பார்த்துவிட்டு வந்தாள்.

"என்னங்க! என்னவோ பேசுறீங்களே. ஒட்டப்பம் வூட்டைச் சுடும் அப்படின்னு ஆப்பத்தை வீசி எறிந்தாரு... உடனே வீடு எரிய ஆரம்பிச்சுட்டது.''

"எரியும்...... எரியும் ......நாடகத்தைவிடச் சினிமாவிலே நல்லா எரியும்.'

"பட்டினத்தாரு அப்படி எரிக்காமலா......படம் எடுத்துக் காட்டுறாங்க?''

"பரஸ்பரசுன்னு ஒரு சாமான் இருக்கு. அதை ஆப்பத்திலே வச்சு வீசியிருப்பாரு. வீடு பஸ்பமாகி இருக்கும்.''

"சரி! அதுதான் ஆப்பத்திலே வச்சு எரிச்சாரு; சுடுகாட்டிலே தாயார் மேலே வாழை மட்டையை அடுக்கி......ஒரு பாட்டுப்பாடி எரிச்சாரே··· அது எப்படி?''

"எல்லாம் அப்படித்தான்! பேசாமல் கிட. நீ படம் பார்க்கப் போறதும், நான் உன்கிட்டே அடிபட்டு முழிக்கிறதும் ... இதுவே பெருந் தொல்லையாப் போச்சு!''

"நான் இனிமேல் படம் பார்க்கப் போறது இல்லேன்னு வைராக்கியம் வச்சுட்டேனே'

"அதென்ன கூத்து? அப்பன்னு மானம் கவிழ்ந்து மழையா ஊத்துமே'

"இந்த ஆம்பிளைகள் இருக்கிற வரையிலும்... பொம்பளைங்க வெளியே கிளம்ப லாயக்கு இருக்கா?''

"சரி சரி!... ஆம்பளையெல்லாம் சாகச் சொல்றியாக்கும்.''

"பொம்புளைங்க வெளியே கிளம்புவதாயிருந்தால் பெட்டியிலே வச்சிப் பூட்டிக்கொண்டு போகணும் இல்லேன்னு...ஆம்புளைங்க அத்தனே பேரும் கண்ணை இறுகக் கட்டிக்கிட்டு வெளியிலே புறப்படணும்''

"செல்லாயி ... செல்லாயி...... என்னமோ செல்லாத சட்டமெல்லாம் போடுறியே!...... என்ன நடந்துச்சு? விவரமாகச் சொல்லு''

'என்னத்த நடக்க தெருவிலே நடக்க முடியலே. வாசலில் வந்து நிற்க வகையில்லே! சினிமாவுக்குப் போனால் அங்கே சிங்காரிச்சுட்டு நடை போடறான்''

"யாரு?...யாரு?''

"அவன்தான் கோடி வீட்டுக் கோவிந்தன். கொட்டாப் புளித் தடியன் மாதிரி......ஒரு மீசை முளைச்சவன் பொஞ்சாதிங்கறதையும் மறந்துட்டு, என்னைப் பார்த்துக் கொட்டாவி விடுகிறான்.''

"உம் ... அப்புறம்''

"நீங்க — மீசையிலே கை போடுறீங்க பாருங்க — அது மாதிரி அவனும் மீசையை முறுக்கிக் காட்டுகிறான். புன்சிரிப்பு வழங்குகிறான். சிகரெட்டும் பத்த வைக்கிறான். நான் போற இடமெல்லாம் வருகிறான்.''

"செல்லாயி! இது சகஜம். கல்யாணமாகாத பயல்! அதிலும் நீ கறுப்பாயிருந்தாலும் கண்ணைப் பறிக்கிறப்பலே இருக்குறே சதா உன்னைப் பார்த்துக்கிட்டே இருக்கிற எனக்கே...உன்னைப் பார்க்கும்போது ஒரு புது உயிர் வராப்புலே இருக்குது''

"சரி...சரி... நெறுத்துங்க ...... இதுதான் வேலே'

செல்லாயி சடக்கென எழுந்து அடுக்களைக்குள் நுழைந்தாள் பேச்சுச் சுவையில் அணைந்து போயிருந்த சிகரெட்டை மீண்டும் கொளுத்திக் கொண்டு எல்லப்பனும் வெளியே கிளம்பினான்.

"என்ன உடம்புடா? என்ன உடம்புடா!...'

"அவ...சிரிக்கும்போது பாத்திபா ..பால வழிவிற மாதிரி!'

"யாரையாவது மதிச்சுப் பேசுறாளா ..அச்சம், கூச்சம், நாச்சம் ஏதாவது இருக்கா?',

"பட்டாளத்துக்காரன் மாதிரியல்லவா நடக்கிறாள்.''

"நம்ப...வீரையா செட்டியார் இந்தப் பக்கம் குடி வந்திருக்கிற விஷயம் இப்பத்தான் புரியுது.''

'அது என்னடா?''

"அவளை எப்படியாவது மயக்கி...'

"நடக்காது தம்பி நடக்காது''

"செட்டியார் பணக்காரன் பாரு, பணத்தாசைகாட்டி...'

"பணமாவது கிணமாவது, பொம்பளைக்குப் புருஷன் பிடிக்கலேன்னுத்தான்...அந்த வேலையெல்லாம் நடக்கும். குபேரனாயிருந்தாலும் மனசுக்குப் பிடிக்காதவனாயிருந்தால்...பொம்பளைங்க மனசும் மாறிடும்.'

"செல்லாயி புருஷன் அசல் அர்ஜுன ராஜன் மாதிரி இருக்கான். அவனைப் பிடிக்காமல் இந்தக் கோணங்கிச் செட்டியின் பணத்துக்காக...?''

"எல்லப்பன் மாத்திரம் அதிர்ஷ்டக்காரன்டா! ஆயிரம் பத்தாயிரம் செலவழிச்சுக் கல்யாணம் பண்றவனுக்கெல்லாம் கண்ணு சொத்தையும், காது ஒட்டையுமாகப் பெண்டாட்டி வாய்க்குது. இவனுக்குப் பாரு, கடைஞ்சு எடுத்த பம்பரம் போலப் பெண்ணு அமைஞ்சுருக்கு.'

"ஜோடி சரியான பொருத்தம், நீலப்புறு மாதிரி அவளும் .. அவளுக்கேற்ற அவனும்.'

எல்லப்பன் - செல்லாயி தம்பதிகளைப் பற்றி, 'வாலிபர் மாநாட்டு விமர்சனங்கள்'' மேலே தீட்டியவை

இரவு உணவு முடிந்தது. செல்லாயிக்குத் தூக்கம் வரவில்லை. அன்று மாலே கட்டாயம் திரும்புவதாகச் சொல்லிவிட்டு வெளியூர் சென்ற எல்லப்பன் ஏனோ வரவில்லை. நாலைந்து தடவை கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து வழிபார்த்தாள் தெருவில் நடமாடுகிற கிழவர்களின் உருவங்கள் கூட செல்லாயிக்குத் தெளிவு பிறக்கும் வரையில் ..எல்லப்பனாகத் தோன்றி ஏமாற்றிக்கொண்டிருந்தன. கோபுரத்துச் சிலே போல் கூரை வீட்டின் முகப்பைப் பிடித்துக் கொண்டு நிலாவின் வெள்ளிச் சிரிப்பில் கண்களை நீட்டுவதும்... பிறகு அவைகளை வாங்கி வழியில் வைப்பதுமாக நின்றாள்...நின்றாள்...நின்றாள்... காலொடியப் நின்றாள்.

நிலவொளி பட்டு ஒரு நிழலாடிற்று, அது எல்லப்பனே தான் என்ற மகிழ்ச்சி போலும்...தன் வைரச் சிரிப்பால் நிலாவைக் கொன்றுவிட்டுத் துள்ளியோடி வீட்டிற் புகுந்தாள்.

ஆனால் தெரு வழியாக அவள் வீட்டில் போட்ட வழிகளை எடுக்காமல் கோவிந்தன் போய்க்கொண்டிருந்தான்.

"கோடி வீட்டுக் கோவிந்தன்'' செல்லாயினுடைய இதயத்தில் இந்த ஒலி சிதறி ஓய்ந்தது. ஏமாற்றத்தின் பிரதிபலிப்பாகச் செல்லாயி வீட்டுக் கதவு சப்தத்தோடு சாத்திக் கொண்டது.

கல் பட்டு விழும் கனிபோல அவள் தரையில் படுத்துக் கொண்டாள். அவள் படுத்த வேகத்தில் விரிக்காதிருந்த படுக்கைப் பாயைச் சுரண்டி விளையாடிய பூனைக்குட்டி பாய்ந்து பறந்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் செல்லாயியின் மூச்சில் கனம் ஏற்பட்டது; அவள் அயர்ந்து தூங்கி விட்டாள்.

கீற்று இடுக்குகளின் வழியாக உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த நிலவு சாயச் சாயக் கூரையின் ஓட்டையால் வார்க்கப்பட்ட ஓர் ஒளிக்கம்பி தெருக்கதவின் தாழ்ப்பாளுக்கு வெளிச்ச வட்டம் போட்டது.

தாழ்ப்பாளின் அடிப்புறமாகத் திடீரென்று முளைத்தது போல ஒரு சிறு இரும்புக் கம்பி ஆடிக்கொண்டிருந்தது. பல கோணங்களிலும் அந்தக் கம்பி ஆடிய பிறகு தாழ்ப்பாளை மேலே தூக்கி எதிர்ப்புறமாகச் சுற்றித் தள்ளிவிட்டுத் தானிருந்த துவாரத்தின் வழியாகவே பின் வாங்கி மறைந்தது.

கதவு சந்தடியின்றி மெதுவாகத் திறக்கப்பட்டது. அவன் உள்ளே வந்தான். ஆம்.........கோடி வீட்டுக் கோவிந்தன்.

அவன் கையிலே ஆரஞ்சுப்பழத் தோல்கள் அரைகுறையாகச் சாப்பிட்டிருந்த அல்வா, ஒரு தாளில் சில காராபூந்தித் துண்டுகள்! அவைகளை ஒரு முறை பார்த்துக் கொண்டான்.

செல்லாயி தன்னைக் கண்டு அலறிவிட்டால் ஊரார் ஓடி வருவார்கள். உயிரை எடுத்து விடுவார்கள் அந்தப் பயங்கரத்திலிருந்து தப்ப, தான் கொண்டுவந்த சாமான்கள் தக்க அரண்கள்!

வருகிறவர்களைப் பார்த்து "வாருமையா வாரும்! இவள் பத்தினிபோல் பாசாங்கு ஆடுகிறாள், இந்தப் பழங்களை நாங்களிருவருமே தின்றோம். அல்வாவை நான்தான் அவளுக்கு ஊட்டினேன். இந்தக் காராபூந்தியில் பாதியை அவள் என் வாயில் கொட்டினாள். யார்மேல் குற்றம்?

ஏதோ...வேறு விஷயத்திற்காக ஏற்பட்ட சச்சரவால் அவள் கத்தினாள் என்பதற்காக நீங்கள் அலறி அடித்து ஓடி வருகிறீர்களே! பேசாமல் போய்த் தூங்குங்கள்' என்று துரத்தி அடித்துவிடலாம். அல்லது இவ்வளவு பெரிய முன்னேற்பாட்டோடு வந்திருக்கிறேன் என்று செல்லாயிடம் கூறிப் பழத் தோலையும் பாதாம் அல்வாவில் பாதியையும் காட்டினால் அவளும் பயப்படுவாள். நம் காரியமும் பழுதில்லாமல் முடியும்.

கோவிந்தனது உதடுகளின் துடிப்பிலே இத்தனை கொடுமையான எண்ணங்களும் கோரத்தாண்டவமாடின.

செல்லாயி தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தைப் பார்த்தபடியே கோவிந்தன் பக்கத்தில் உட்கார்ந்தான். கைகளை மெதுவாக எடுத்து கன்னங்களைக் கிள்ளினான். அயர்ந்த உறக்கம் அவளுக்கு. கன்னங்களைத் தடவிக் கொண்டு வேறுபக்கம் திரும்பிப் படுத்தாள். கோவிந்தன் துடித்தான். உதடுகளைக் கடித்துக் கொண்டான்.

"செல்லாயி! செல்லாயி!'' வறண்ட நாக்கிலிருந்து கிளம்பிய உளறல் மொழிகள்! வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் நடுங்கின. அவளுடைய நீண்ட கூந்தல்; அதைக் கோதினான்! மீண்டும் கன்னத்தில் கிள்ளினான். செல்லாயி திடுக்கிட்டெழுந்தாள்.

"ஆங்'' இந்தக் கூச்சலில் எவ்வளவு ஆவேசமிருந்தது என்பதைக் கோவிந்தனின் கன்னத்தில் விழுந்த அடி சொல்லிற்று. செல்லாயியின் வாய் மூடப்பட்டது.

ஓர் ஊமைப் போர்க்களம், செல்லாயியின் குடிசையில்! கடைசியில் செல்லாயி வெற்றி பெறவில்லை. தோற்றுவிட்டாள், கோவிந்தனின் கன்னங்களில் — கண் இமைகளில் — கழுத்தின் ஓரத்தில் —கைகளில் —இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

செல்லாயியின் வாய் இப்போது கட்டுப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் ஊமையாக இருந்தாள்.

"இந்தாப்பாரு'.........நடந்தது நடந்துட்டுது; உன் புருஷன் வந்தா விளம்பரம் பண்ணி உன் பேரைக் கெடுத்துக்காதே! அவ்வளவுதான் நான் சொல்லுவேன்.

செல்லாயியின் கண்களில் அரும்பிக் கொண்டிருந்த கண்ணீர்த் துளிகளைக் கவனிக்காமல் கோவிந்தன் கிளம்பிவிட்டான்.

"முன்னையிட்ட தீ முப்புரத்திலே'

பின்னைவிட்ட தீ தென்னிலங்கையிலே!

என்னுடைய மனைவியிட்ட தீ— மங்காத மானத்திலே!!!

என்று எல்லப்பன் பாடுவது போல் அந்த வீட்டுக் கூரையின் ஓலைகள் ஓலமிட்டசைந்தன.

காலையில் எல்லப்பன் வந்தான். அதற்கு முன்பாகவே அவள் வீட்டில் இறைந்து கிடந்த பழத் தோல்களைப் பொறுக்கி எறிந்து விட்டாள்.

"ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?''

"ஒன்றுமில்லே; தலை வலிக்கிறது,''

"இந்தா...இந்தத் தைலத்தைப் போட்டுக்கோ!'

செல்லாயி விஷயத்தை மறைத்தே விட்டாள். கணவனுக்கு "அந்த இரவு'' பற்றித் தெரிந்தால் களங்கமடைந்த தன்னோடு குடும்பம் நடத்துவானோ என்ற சந்தேகம்.

நாட்கள் ஓடின...

கோவிந்தன் செல்லாயி வீட்டுப் பக்கம் ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை நடந்தான். பலப்பல அலங்காரங்களில்; பலப்பல உடைகளில்: ஒருநாள் செல்லாயி வாயிற்படியருகே நின்றுகொண்டிருந்தாள். கோவிந்தன் தெரு வழியே நடந்து கொண்டிருந்தான்.

செல்லாயியின் காலடியில் ஒரு 'தாள் முடிச்சு' வந்து விழுந்தது. எல்லப்பன் வருவதற்குள் அதிலிருந்த ஜிலேபியைத் தின்றுவிட்டு இலையையும் தாளையையும் கொல்லையில் எறிந்து விட்டாள். பின் ஒரு நாள் தெருவில் சென்ற கோவிந்தன் சிரித்தான், செல்லாயியும் சிரித்தாள். மற்றொரு நாள் ஒரு பொட்டலம் அவள் முன் விழுந்தது: அதை எடுத்தாள். அதில் பத்து வெள்ளி ரூபாய்கள். பத்திரமாகப் பெட்டியில் வைத்துக் கொண்டாள்.

அன்று எல்லப்பன் வெளியூர் போயிருந்தான். அன்று நிலா இல்லே; அமாவாசை.

நள்ளிரவு முடிந்து விட்டது. உதய சூரியனை எதிர் நோக்கி உலகம் உருண்டபடி இருந்தது. எல்லப்பன் வீடுநோக்கி வந்துகொண்டிருந்தான். செல்லாயியைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவல், அவன் ஒவ்வொரு அசைவிலும் நர்த்தனமாடிற்று.

கதவு தட்டப்பட்டது. முதலில் மெதுவாக-பிறகு வேகமாக. பிறகு உரத்த சப்தத்தில்! கதவு திறக்கப்படவில்லே.

"பாவம் அசந்து தூங்குகிறாள்-பகலெல்லாம் வேலை-என்ன செய்வாள்? இந்த நேரந்தவிர அவள் வர்க்கத்திற்கு வேறு ஓய்வேது?' இதை எண்ணிக்கொண்டே வீட்டுக் கூரையைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கடைசியில் ஒரு கம்பியை எடுத்தான். கதவின் சிறு துவாரத்தில் கம்பி நுழைந்தது, உள் தாழ்ப்பாள் சுற்றிச் சுழன்று திறந்து கொண்டது-முன்பு கோவிந்தன் திறந்தது போல!

கதவைத் தள்ளிக் கொண்டு எல்லப்பன் உள்ளே சென்றான். விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. "செல்லாயி' என்று அன்பொழுக அழைத்துக் கொண்டு வந்து படுக்கையில் அவளைத் தொட்டான்.

"யார் அது?'

வாரிச் சுருட்டிக் கொண்டு செல்லாயி எழுந்தாள். எல்லப்பன் பேசவே இல்லே; கோவிந்தன் கதவு வரையில் நடந்தான் பிறகு பறந்துவிட்டான் "மன்னிச்சுடுங்க' செல்லாயி அழுதாள்.

'அழாதே! ஏன் அழுகிறாய்? உலகத்திலே அழுவதற்கு அர்த்தமே தெரியலியே. விபசாரியும் அழுகிறாள் நல்லவனும் அழுகிறான். பத்தினியும் அழுகிறாள் கெட்டவனும் அழுகிறான் பணக்காரனும் அழுகிறான் பாட்டாளியும் அழுகிறான்.'

"நான் அழுது...'' செல்லாயி முடிக்கவில்லே.

"தெரியும்; குற்றம் செய்துவிட்டோமே என்று அழவில்லே நீ! செய்த குற்றம் தெரிஞ்சுவிட்டதேன்னு அழுகிறாய், செல்லாயி! உலகத்திலே விபசாரம் நடப்பதற்கு என்னென்னவோ காரணங்கள் சொல்றாங்களே! சமுதாயக் கோளாறுன்னு சங்கநாதம் செய்றாங்களே! இப்ப உன் விஷயத்துக்கு என்ன சொல்லப்போறாங்க! விதவைங்க — இளமையிலே அறுத்துப்போன பெண்ணுங்க - கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட கன்னிங்க— இவுங்க எல்லாரோடு — உன்னைப் போன்ற பேராசைப் பேய்களையும் சேர்த்துக் கொள்ள வேணும் நீ ஏன் இந்த விபசார வேலையில் ஈடுபட்டாய் சொல்லு; ஏன் இந்த துரோகம் செய்தாய்? சொல்லு ஏதாச்சும் ஒரு காரணம்.''

"என் தலைவிதிதான்!'

"தலைவிதி! தப்பித்துக் கொள்ளுவதற்குச் சரியான தந்திரம்! யாராவது பக்தர்கிட்டே போய்ச் சொல்லு.''

"என் புத்தி கெட்டத்தனம்!''

"உம்! ஆசைப்பட்ட புருஷன் கிடைக்காவிட்டால் பொம்பளைங்க வாழ்க்கை பொசுங்கிவிடும் என்பாங்க வாலிபனு இல்லாட்டா வாழ்க்கை வதங்கிடும் என்பாங்க. எல்லாம் உன் மனசுப்படி இருந்தும் நீ கெட்டதற்கு காரணம் என்ன சொல்வாங்களோ தெரியலியே! மரத்

(10-ம் பக்கம் பார்க்க)

அதிகாரக் குவிப்பும் — சர்வாதிகாரமும்!

தேசிய நீரோட்டம் என்ற தொடர் மிசாக் காலத்தில் கங்கை வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடியது. அன்று தில்லியில் கொலுவிருந்த அம்மையார் தமக்கு ஆகாதவர் எல்லாம் "தேசிய நீரோட்டத்தில் கலக்காதவர்" எனக் குற்றம் சுமத்தி அவர்களைத் தண்டிக்கவும் தயங்கவில்லை;

தமிழகம் தேசிய நீரோட்டத்தில் இனி இணையவேண்டும் என்பதற்காகத் தான் கழக ஆட்சி கலைக்கப்பட்டதாகக் கூடப் பேசப்பட்டது.

கலிங்க நாட்டுத் தலைவி (ஒரிசா மாநில முதல்வர்) தம் கட்சிக்காரர் என்றும் பார்க்காமல் பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கும் இதே காரணம் கூறப்பட்டது.

தனி நபர் ஆதிக்கத்தை ஒந்திப் திருநாட்டில் ஊன்று வந்தப் பயங்கரமான வழித் தடம் அமைக்கப்படுவதையே .. உணர்த்துகின்றது என்று பல அன்று வருந்தினர். மக்களாட்சியில் கருத்துள்ள அனைவரும் இதனைக்கண்டு கலங்கினர். குடியரசுத் தத்துவத்திற்கே சாவுமணி அடிக்கப்படுகிறது என மனம் நொந்தனர். ஆருயிரைத் தந்தேனும் சனநாயகத்தைக் காப்போம் என்ற சூளுரையை நாட்டு நலனில் நாட்டமுள்ளவர்கள் அன்று மேற்கொள்ள இத்தகைய போக்குகள் காரணமாக அமைந்தன!

தியாகத் தலைவர்கள் பலர் தான் தோன்றித் தனமாகக் கைது செய்யப்பட்டதும், பன்மைப் பண்புகளால் பொலிவுபெற்ற நாட்டில் ஒருமைத் தேசியத்திற்குஇடையூறு என்று சொல்லி தனித்தன்மைகளை "தில்லியின் மூல தேவதை" அழிக்க முனைந்ததும் எண்ணற்ற பல தேசிய வாதிகளுக்கே அன்று அச்சத்தைத் தருவதாக இருந்தது. அதிகாரக் குவியல்தான் மக்களாட்சியின் குரல்வளையை நசுக்க இடம் கொடுத்துவிட்டது என்பதைப் புரிந்துகொள்ள அன்று அவர்கள் தவறவில்லை

இவ்வளவு வியப்பு விளைந்த நிலையில் வாராது வந்த மாமணி போல் நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. நாடு தழுவித் தன் வேட்பாளரை நிறுத்த ஜனநாயகக் கற்புக் கடம் பூண்ட ஜனதா முடிவு செய்தது; எடுத்த முடிவுக்கு ஏற்ப தேர்தலுக்கு முன் விரைந்தும் செயல்பட்டது. தன் கொள்கைப் பிரகடனத்தில் ஜனநாயகம் பட்டுப் போகாமல் இருக்க அதிகாரக் குவியலைத் தடுத்து அதைப் பரவலாக்குதல் தன் செயல் நாட்டத்தில் முதன்மையான ஒன்றாக இருக்கும் எனவும் நாட்டுக்கு அறிவித்தது!

இன்று ஆட்சி அதன் கையில் இருக்கிறது. பதவிக்கு வந்து ஓராண்டு உருண்டோடி விட்டது என்றாலும் அதிகாரக் குவிப்பு என்னும் சக்தியில் அதன் ஆட்சிச் சக்கரம் அமிழ்ந்து கிடப்பதைத்தான் நாடு காண்கிறது பழைய மூர்க்க பலத்தோடுதான் இன்னும் தில்லி தன் பயனற்ற தள்ளாட்டத்தை நிர்வாகம் என்ற பெயரால் இயங்கிக்கொண்டு உள்ளது!

இந்திய நாட்டின் அயல் நாட்டு உறவுகள் ஓரளவுக்குச் சரியான வழியில் முன்னிலும் செம்மை பெற்று வருகிறது என்ற உணர்வு இன்று பரவலாகக் காணப்படுகிறது ஆனால் தொழில் வளர்ச்சி? மந்தகதியில் நடப்பதாக மத்திய நிதியமைச்சரே வருத்தப்படுகிறார்! என்ன காரணம்?

முன்னது மாநில அரசுகளின் தொடர்பின்றி மத்திய அரசே திட்டமிடுவதற்கு இணக்கமான ஒரு துறை. எனவே எச்சரிக்கையுடன் செயல்படுத்தும்போது அதன் பயன்கள் நிறைவுத்தரக்கூடியனவாக அமைய முடிகிறது.

அதே அரசுதான் தொழில் வளர்ச்சிக்கும் திட்டமிடுகிறது வெளி விவகாரத்துறை அமைச்சர் அளவுக்கு ஆற்றல் பெற்ற ஒருவரின் கீழ்தான் தொழில் அமைச்சகம் இயங்குகிறது என்றாலும் தொழில்களை ஊக்கி, உருவாக்கி, உருப்படுத்த வேண்டிய மாநில அரசுகள் போதிய அதிகாரம் இல்லாமையாலும், நிதி ஆதாரப் பற்றாக் குறையாலும் தன் முயற்சி அற்றுப் போகின்றன எனவே இந்த வகையில் வளர்ச்சி தடைபடுகிறது

தொழில் துறையின் தேக்கத்திற்கும் பல காரணங்கள் கூறப்படலாம் எனினும் கடந்த முப்பதாண்டு காலமாக மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இதுவரையில் ஏற்பட்டுள்ள பூசல்களையும் மோதல்களையும் கூர்ந்து பார்த்தால் இதுவே அடிப்படைக் காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

இதன் விளைவாக நமது நாட்டில் அவலத்திற்கு மூல காரணமாக உள்ள வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுகிறதே தவிர குறைய வழியில்லை அதனைக் குறைக்க குறுக்கு வழிகள் எவையும் கிடையா; தொழில் பெருக்கத்தை விட்டால் வேறு வழிகள் எதுவும் இல்லை காரணம், தொழில்கள் பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்வதில்லை; பயனுள்ள வேலை வாய்ப்புகளையும் அவைதாம் உண்டாக்குகின்றன.

பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொண்டே மக்களுக்கு வேலை வாய்ப்பும் தருபவை அவை. மற்றவை எல்லாம் ஒருவகையில் உள்ள பொருளைக் கைமாற்ற மட்டுமே பயன்படுவதால், உருப்படியான முன்னேற்றத்தைக் காண உதவமாட்டா! நாட்டில் உள்ள செல்வத்தைப் பெருக்கவோ, இல்லாததைப் படைக்கவோ அவை உதவுவதில்லை! உலகெங்கும் தொழில் வளர்ச்சியே எந்த நாட்டிற்கும் வளமும், நாட்டோர்க்கு நலமும் சேர்ப்பதாக உள்ளது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

தொழிலும், அயல் நாட்டுறவும் இரு முக்கிய துறைகள் என்பதால் இங்கு ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதேபோல் ஒவ்வொரு துறையையும் எடுத்து அலசினால் இந்த நாட்டின் முன்னேற்றம் தடைபடக் காரணம் ஒருவகை இரட்டையாட்சி முறையே என்பதை எளிதில் உணர முடியும்.

மேலும் மக்களாட்சித் தத்துவத்தைப் பேணுவதற்கும் மத்திய அரசின் தலையீடோ குறுக்கீடோ இல்லாத அளவுக்கு மாநிலங்களின் உரிமைகளும் பொறுப்புகளும் சட்டபூர்வமாக வரையறுக்கப்படவேண்டும் என்ற நிர்ப்பந்தம், நெருக்கடி நிலைக்குப் பிறகு இந்த நாட்டில் ஏற்பட்டது இதை உதாசீனப்படுத்துவது ஜனநாயகத்தை மீண்டும் ஊனப்படுத்தும்!

தேசிய நீரோட்டம் என்ற சொல் இன்று வழக்கில் இல்லை. ஆனால் அந்த நீரோட்டத்தைப் பெருக விட்டவர்கள் கைக்கொண்ட அதிகாரங்கள் அனைத்தும் ஒரு சில நீங்கலாக, ஜனதாவின் கரங்களையும் அலங்கரித்துக் கொண்டுதான் உள்ளன! கைக்கு மிஞ்சிய அதிகாரங்களைக் கைக்கொள்ள விரும்பும் எந்த அமைப்பும் தவறான கட்டுப்பாடுகளையும் விதித்தே ஆகவேண்டும்! இல்லையென்றால் செயல்படமுடியாது!

எனவே அதிகாரக் குவிப்பைப் பேணிக்காக்க, வேண்டாத தனக்கே விருப்பமில்லாத—சில கட்டுப்பாடுகளை அகற்ற முடியாமல் ஜனதாவும் திண்டாட நேர்கிறது!

மாநில அரசுகளின் கரங்கள் பழைய நிலையிலேயே கட்டப்பட்டு அவை செயவிழந்து கிடக்கின்றன! மத்

செகந்தப்பன்

திக்கு அடங்கி நடப்பதுதான் மாநில சுயாட்சி என்கிற ஒரு விபரீத தத்துவம்கூட தமிழக முதல்வரால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது!

மாநில அரசுகள் மத்திய அரசுடன் இணங்கி நடக்கலாம்; ஆனால் அடங்கி நடக்கக் கூடாது; அடங்கிப் போகும் அடிமைத்தனம் சுயமுயற்சியைக் கொன்றுவிடும்! இந்த நிலைக்கு மாநிலங்களை ஆளாக்கப்பட்டதே இந்திய நாட்டின் வளர்ச்சிக் குன்றக் காரணம் என பல அறிஞர்கள் ஆதாரத்துடன் நிறுவியுள்ளனர்!

இவரைப் போன்ற சில விபத்துக்கள் நாட்டின் உயிர் நாடியான இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குக் குந்தகமாக இருந்தாலும் நாடு தழுவிய ஒருநல்லுணர்வு இந்த வகையில் இன்றுபெருகி வருகிறது.

மார்க்சீய வாதிகள் போர் முரசே கொட்ட ஆரம்பித்து விட்டனர். அண்ணாவின் வழி வந்தவர்களுக்கு இது ஒரு போற்றத் தகுந்த நாட்டு நடப்பு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நாட்டு நலனில் ஆர்வம் கொண்ட ஜனதா, எந்த மாற்றத்தையும் கொண்டுவர கூசுவதுதான் வியப்பாக உள்ளது!

இன்றைய பாரதப் பிரதமர் ஒரு பழுத்த அரசியல்வாதி எனினும் மாநில சுயாட்சி குறித்து முந்தையோர் கொடுத்த குரலில் ஒருசிறிதும் மாற்றமின்றித் தம் கருத்தை வெளியிடுவது ஏன் என்று புரியவில்லை! நாளை இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அன்னையே மீண்டும் அரியணை ஏறுவதாக இருந்தால்...அதுவரை மத்திய அரசு — மாநில உறவுகள் மாற்றமின்றி இன்றுள்ளது போலவே நீடித்தால்... அவர் தன்னை 24 மணி நேரத்திற்குள் ஏற்கனவே செய்ததுபோல் ஒரு சர்வாதிகாரி ஆக்கிக் கொள்ளமுடியும்!

மாநிலங்களின் சில அடிப்படை உரிமைகளேனும் திட்டமாக வரையறுக்கப்பட்டு அவற்றில் மத்திய அரசு தலையிட முடியாது என்று நிலை உறுதிப்படுமானால், ஒருவர் எவ்வளவு முயன்றாலும் சர்வாதிகாரப் பாதைக்கு இந்தியாவை இட்டுச் செல்ல முடியாது!

மாநிலங்களின் மீது மேலதிகாரம் செலுத்த முடியாத நிலையிலும் ஒரு வலுவான மத்திய அரசை அமைப்பது ஒன்றும் கடினமான காரியமல்ல. இது மொரார்ஜி அவர்களுக்குப் புரியாமலா இருக்கும்? நிச்சயம் புரியும்! ஏதோ இந்த நாட்டின் போதாதகாலம், எப்படிப்பட்டவராயினும் அதிகாரக் குவியலின் மீது அமர்ந்ததும் அதைக் கட்டிக்காப்பது தம் கடமை என எண்ணிவிடுகின்றனர்! பதவிதரும் அதிகாரம் இத்தகு பிழைபட்ட உணர்வை அவர்களுக்கு ஊட்டிவிடும்போலும்!

மாநிலங்களின் மீது மத்தியின் அதிகார நிர்ப்பந்தம் இராது என அவர் கூறுவது, ஒருவேளை அவர் பிரதமராக இருக்கிறவரை நிறைவேறக் கூடிய நெறிமுறையாகவும் இருக்கலாம். ஆனால் எவர் பிரதமராக வந்தாலும் எந்த மாநில உரிமைகளிலும் கைவைக்க முடியாதபடி அரசியல் சாசனத்தையே மாற்றி அமைப்பதில் என்ன தவறு? அப்படிச் செய்தால் மட்டுமே சர்வாதிகாரிகள் என்றும் தோன்றாத நிலை இந்த நாட்டில் ஏற்பட முடியும்

தி. மு. க. வைப் பொறுத்த வரையில் மாநில சுயாட்சி என்பதுமக்களாட்சித்தத்துவம் சிதையாமல் தடுக்கும் அரண் மட்டும் அல்ல, பொருளாதார வளர்ச்சிக்கு வித்தும் அதுதான் என்கிற அழுத்தமான கோட்பாட்டை மேற்கொண்டு தொடர்ந்து கூறி வருவது கழகம்! மொழி, இனம், பண்பாடு காப்பாற்றப்படவும் வரலாற்றுப்பின்னணியிலும் நாம் இதனை வலியுறுத்தி வருகிறோம்.

மத்தியில் மலர்ந்துள்ள புதிய ஆட்சி இந்த உணர்வுகளைப் புரிந்து நடப்பது, இந்திய நாட்டின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கநிச்சயம் உதவும். ஜனநாயகக் கற்பையேனும் காக்கிற உறுதிப்பாடு ஜனதாவிடம் இருக்குமென நாடு எதிர்பார்க்கிறது.

மகாத்மா காந்தி தமது வாழ்நாள் முழுவதும் அதிக பட்ச அதிகாரக் குவிப்பு சர்வாதிகாரத்திலும், பாசிசக் கொள்கைகளை நோக்கியும் கொண்டு போய்விடும் என்று வலியுறுத்தியதை நாம் மறந்துவிட்டோம்; சர்வாதிகாரத்திற்கும், பாசிசத்திற்கும் எதிராகப் பாதுகாத்துக்கொள்ள ஒரே வழி அதிகாரத்தைப் பரவலாக்குவதுதான்; ஆனால் சட்டத்தின் வாயிலாக அதிகாரத்தைக் குவித்து வைத்திருப்பதன் இயற்கையான விளைவாக நம்நாடு படிப்படியாகப் பாசிசத்தை நோக்கிச் சென்றுவிடும்

—தாமோதரர் சொருப் சேட்

உதயசூரியன் மோதிரம்

1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலின் பல்லாயிரக்கணக்கான இயக்க தோழர்களின் கரங்களில் கனபாழியாக திகழ்ந்த உதய சூரியன் மோதிரத்தை பேரறிஞர் அண்ணாவும், தமிழகத் தலைவர் கலைஞரும் கண்டு பூரிப்பு அடைந்தார்கள் மீண்டும் அந்தவெற்றிச் சின்னம் உதய சூரியன் மோதிரத்தை முழுதும் பஞ்சலோகத்தால் தயாரித்து 'வாழ்க கலைஞர்' என்று பொறித்து தருகிறோம். ஒரு மோதிரம் விலை ரூ. 15-00 தபால் செலவு 3-50 தனி. உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து ரூ. 3-00 அட்வான்சுடன் அனுப்பினால் மீதித் தொகைக்கு மோதிரத்தை V.P.P. மூலம் அனுப்புகிறோம்.

சக்தி ஜி. சம்பந்தன்
42, பள்ளிக் கூடம் தெரு,
பட்டாபிராம், சென்னை-600072

சென்னையில் கீழ்கண்ட விலாசத்தில் நேரில் சென்றும் மோதிரத்தை பெற்றுக்கொள்ளலாம்.
போட்டோ வினஸ்,
104. C. N. K. ரோட் - சென்னை-5.
CINEMA SLIDE, OUTDOOR FLASH PHOTOS ETC.

இந்தியாவைவிட்டால் காஷ்மீருக்கு வேறு போக்கிடமில்லை!

[காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக்முகம்மது அப்துல்லா அவர்கள், 'சண்டே' ஆங்கில வார ஏட்டுக்கு அளித்துள்ள சிறப்புப் பேட்டியின் பிற்பகுதி இது. 'காஷ்மீர் மக்களுக்கு இந்தியாவைத் தவிர வேறு போக்கிடமில்லை" என்று அவர் இதில் வலியுறுத்துகிறார்.]

கே:- டில்லியிடம் நீங்கள் மனக்கசப்புக்கொண்டிருந்த போதும் கூட, அவ்வித (பிரிவினை) சிந்தனைக்கு நீங்கள் இடம் கொடுத்ததில்லையே!

ப:- ஒருபோதுமில்லை. சொந்த நாட்டிலிருந்து கொண்டுதான் நாம் போராட வேண்டும். இந்த (ஜனநாயக) பரிசோதனைக்கு நாம் புதியவர்கள். பல நூற்றாண்டுகளாக அரசர்களும் சக்கரவர்த்திகளும் நம்மை ஆண்டார்கள். 'தங்கள் தலைவிதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்வது என்பது இந்திய மக்களுக்கு முற்றிலும் புதியதொரு பரிசோதனை, இதற்கு இன்னும் சிறிது காலம் ஆகும்......தனி நபர் ஆட்சி என்ற அம்சம் இன்னும் இருக்கிறது. மக்கள்கூட இதனை அமைதியாக ஏற்றுக்கொண்டு விடுகிறார்கள்.

கே:- இந்த ஜனதா அரசு தோல்வி காணுமானால், நாம் மீண்டும் தனி நபர் ஆட்சியைச் சந்திக்க நேரிடும் எனக் கருதுகிறீர்களா?

ப:- அந்த அபாயம் இருக்கத்தான் செய்கிறது. எனவே. மக்களின் நலனைக்கருதி ஜனதா தைரியமாகச் செயல்பட வேண்டும். தனி நபர் ஆட்சியை மக்கள் விரும்பவில்லை; திருமதி காந்தி ஆட்சியின் கடைசி நாட்களில் 'குண்டாந்தடி' கையாளப்பட்ட முறையை அவர்கள்-(மக்கள்) விரும்பவில்லை. எதிர்காலத்தில் இது நடைபெறாது என மக்கள் நம்பினார்கள் ஆகவேதான், ஜனதாவிடம் அதிகாரத்தை வழங்கினார்கள். எனவே! அவ்விதம் நடக்காதென அவர்கள் உத்தரவாதமளிக்க வேண்டும். அரசமைப்பை மறுபரிசீலனை செய்யாமல், அவர்கள் அவ்விதம் உத்தரவாதமளிக்க இயலாது அதில் எவ்விதமான குறைபாடும் இருக்காது. தங்களிடமுள்ள சில அதிகாரங்களைப் பிரித்து மாநில அரசுகளிடம் கொடுத்தால்தான் அதனைச் செய்ய முடியும்.

கே:- காஷ்மீர் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு உங்களுக்கும் ஜனதாவுக்குமிடையே உடன்பாடு ஏற்படாமல் போனதேன்?

ப:- அப்பொழுது அவர்கள் மிக உயரமான குதிரையில் சவாரி செய்துகொண்டிருந்தார்கள், காஷ்மீரைப் பொறுத்தவரையில் அது ஒரு தேசியப் பிரச்சினை. எப்பொழுதுமே அது ஒரு தேசியப் பிரச்சினையாகவே இருந்து வந்திருக்கிறது – அது ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல-என்று அவர்களுக்கு நான் உணர்த்த முயன்றேன். காஷ்மீரில் எதிர்முகமாய்ச் செயல்படுவது, அம்மாநிலத்திற்கு மட்டுமின்றி, நாடு முழுவதற்குமே ஆபத்தானது. காஷ்மீர் மீது நாடு முழுவதுமே அக்கறை கொண்டிருக்கிறது. காஷ்மீர் காரணமாகத்தான் நாடு பல போர்களைச் சந்திக்க நேரிட்டது, எனவே, குறிக்கோள் ஒன்றுதான். இந்நாட்டிலிருந்து காஷ்மீர் போய்விட வேண்டும் என விரும்பும் எந்தக் கட்சியும் இங்கு உயிர் வாழமுடியாது. இந்தப்பொது நோக்கம் ஒன்றே ஒன்றைத்தான் சுட்டிக் காட்டுகிறது. மத்தியில் ஆட்சியிலுள்ள எந்த அரசையும் காஷ்மீர் அரசு அங்கீகரிக்கிறது; டில்லியுடன் ஒத்துழைக்கவே அது விரும்புகிறது; எதிர்முகமான போக்கை நாம் கைக்கொள்ள இயலாது என்பதால் ஒத்துழைப்புக் கொள்கையையே நாம் கைக்கொண்டாக வேண்டும். எனவே எங்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசில் எத்துணை பூசல்கள் இருந்தாலும் நாங்கள் (டில்லியிலுள்ள) ஆளுங்கட்சியுடன் ஒன்றியே செயல்படவேண்டியுள்ளது. இப்பொழுது, நாங்கள் (காஷ்மீரில்) எந்த மேடையை ஏற்றுக் கொள்வது என்ற பிரச்சினை எழுகிறது. மக்களை உணர்ச்சி பூர்வமாகக் கவர்வதற்கு ஏற்ற மேடையாக அமைந்திருப்பது காஷ்மீர்தான். எனவே, அந்தமேடையைத்தான் நாங்கள் ஏற்க வேண்டியுள்ளது. காஷ்மீரில் இத்துணை மாற்றங்களையும், இத்துணை புரட்சியையும் ஏற்படுத்தியிருப்பது தேசிய முன்னணிதான். ஆகவே மக்கள் அதனுடன் உணர்ச்சி பூர்வமாக ஈடுபாடுகொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த மேடையில் கருத்தைச்சொல்வதுதான் எங்களுக்கு எளிதாயிருக்கிறது மற்றக் கட்சிகள் காங்கிரசானாலும், ஜனதாவானாலும்-காஷ்மீரில் இயங்கவில்லை

காங்கிரசுடனோ ஜனதாவுடனோ தேசிய மாநாட்டுக் கட்சிபகையைக்கொண்டிருப்பதாக நான் கூறவில்லை. என்னைப் பொறுத்தவரையில், எந்த மேடை அதிகப் பயனுடையது என்பதுதான் பிரச்சினை. தேசிய மாநாட்டுக் கட்சிதான் சிறந்தது என நான் கருதுகிறேன். அக்கட்சியின் குரல்தான் காஷ்மீர் மக்களின் ஒரே குரல் என உலகம் கருதுகிறது. மிகவும் நெருக்கடியானதொரு காலக் கட்டத்தில். 1947 இல், நாங்கள் காங்கிரசோடு தோளோடு தோள் நின்று பணியாற்றினோம். அப்போது நாங்கள் வகுப்புவாதிகளாகத் தோன்றவில்லை. உண்மையில் ஒருவருக்கு ஒருவர் வலிமை சேர்த்தோம். தேசிய மாநாட்டுக் கட்சியைக் கலைக்கலாகாதென அன்று தலைவர்கள் கருதினார்கள். இப்பொழுது, எனது கட்சியை ஜனதாவுடன் இணைத்துவிடவேண்டுமென ஏன் எதிர்பார்க்க வேண்டும்? அப்போது நான் சொன்னேன்:" நீங்களே இன்னும் இணையவில்லை. முதலில், நீங்கள் உங்கள் கட்சியை இணைக்க முடிகிறதா என்பதைப்பார்ப்போம். கடைந்தெடுத்த வகுப்பவாதக் கட்சியான அகாலிதளத்தை உங்கள் கட்சியின் ஓர் அங்கமாக இருக்க அனுமதித்திருக்கிறீர்கள்' தேசிய மாநாட்டுக் கட்சிக்கு இத்தகைய களங்கம் சற்று அதிகமாகவே உண்டு. எனினும், காங்கிரசுடன் சேர்ந்து ஒரு சில குறிக்கோள்களுக்காக இது போராடியிருக்கிறது. 1947-ல் அதே குறிக்கோள்களில் அது நம்பிக்கை கொண்டிருந்தது. 1953-இல் துரோகத்தைக் கண்டபின்னருங்கூட, நாங்கள் அந்தக் குறிக்கோள்களைக் கைவிடவில்லை-எனவே தேசிய மாநாட்டுக் கட்சியைக் கலைத்துவிடும்படி நீங்கள் ஏன் பிடிவாதம் பிடிக்க வேண்டும்? அங்கும் இங்கும் சிந்திச் சிதறியவற்றை ஒன்று சேர்த்துப் போட்டிக் கட்சி ஒன்றை உருவாக்க முயன்றார்கள். ஆனால், அந்த முயற்சிக்காக அவர்களே வருந்த நேரிட்டது.



கே: (அரசமைப்பின்) 370-வது பிரிவை ரத்து செய்ய விரும்புவதன் காரணமாகத்தான் அவர்கள் தேசிய மாநாட்டுக் கட்சியைக் கலைத்துவிட விரும்புகிறார்கள் எனக் கருதுகிறீர்களா?

ப: நெடுங்காலமாகவே அந்த எண்ணம் அவர்களுக்கு உண்டு. ஒரு கூட்டாட்சியில மாநிலங்கள் எவ்விதம் நடத்தப்பட வேண்டுமோ அவ்விதம் நடத்தப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. அவர்களுக்கு உடன்பாடில்லாத கருத்து இதுதான். (370-வது பிரிவை நீக்குவதற்கு) அவர்கள் முயன்று பார்த்தார்கள். ஆனால், அதை எதிர்த்து ஏற்பட்ட பெருங் கொந்தளிப்பைக் கண்டு அவர்கள் பயந்துவிட்டார்கள். 370-வது பிரிவில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்று அவர்கள் கூற நேர்ந்தது.

கே: காஷ்மீரின் வளர்ச்சி வரலாற்றில் உங்களுடையபங்கு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: விவரம் தெரியும் வயதை எட்டியபோது நான் கண்டதெல்லாம் வறுமையும் துயரமும் தான் ஒரு தனி நபர் வளர்ந்தால் மட்டும் போதாதென்பதை உணர்ந்தேன். அதனால், மக்களின் மேம்பாட்டுக்காகப் பாடுபடுவதென உறுதி பூண்டேன். அவர்கள் நெடுங்காலம் துயரிலாழ்ந்துவிட்டார்கள், அவர்களுக்கு உதவ வேண்டுமென எண்ணினேன். கல்வியை முடித்த பிறகு எப்படியோ அரசியலில்குதித்தேன். அவர்களை முன்னேற்றுவதற்குக் கடந்த 45 ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிறேன். அவர்களின் குருதியைக் குடித்து வந்த ஜாகிர்தாரி முறையை முதலில் உடைத்தெறிந்தோம். 'பிரிட்டிஷாருடன் தனிப்பட்ட முறையில் இந்தியாவுக்குப் பகைமை இல்லை என்று காந்தியடிகள் சொல்லிக்கொண்டே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடினாரல்லவா! அது போன்ற அரசைத் தனிப்பட்ட முறையில் நாங்கள் வெறுக்கவில்லை. மக்களை ஏழ்மையில் ஆழ்த்திய அந்த ஜாகிர்தாரி முறையைத்தான் நாங்கள் எதிர்த்தோம். நாங்கள் அதைஎதிர்க்கத் தொடங்கியதும், அது தனது பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி முழு மூச்சுடன் எங்களை எதிர்க்கலாயிற்று.

கே: கடந்த 45 ஆண்டுகளில் மிக நெருக்கடியான கட்டம் எது என்று கருதுகிறீர்கள்?

ப: ஓ! எத்தனையோ நெருக்கடிகள், அடுத்தடுத்து நெருக்கடிகள்(சிரிக்கிறார்) மக்களிடமும் எத்தனையோ குறைபாடுகள் இருந்தன. முதலில் சீர்திருத்தங்களை எதிர்க்கும் மக்களின் மனப்போக்கை எதிர்த்துப்போராட வேண்டியிருந்தது. முல்லாக்கள் போன்றவர்கள் மக்களின் அறியாமையைத் தங்களுக்குச் சாதகமாக முழு அளவில் பயன்படுத்தி வந்தார்கள். மக்கள் அவர்களின் பிடியில் இருந்தார்கள். எனவே அவர்களின் பிடியிலிருந்து முதலில் மக்களை விடுவிக்க வேண்டியிருந்தது. காஷ்மீர் மக்களில் 95 சதவிகிதம் பேர் முஸ்லீம்கள்; பரம ஏழைகள். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்திருந்ததால், அவர்கள் அலைக்கழிக்கப்பட்டார்கள் நாங்கள் அரசிடலை எந்தப் புத்தகத்திலும் படிக்கவில்லை. அப்பொழுதான் கற்றுக் கொண்டு வந்தோம். நான் அவர்களை ஒருங்கிணைத்தேன் எனவே எனக்குத் திரண்ட கூட்டத்தினர் பெரும்பாலும் முஸ்லீம்களாக முஸ்லீம் குடியானவர்களும் தொழிலாளர்களுமாக-இருந்ததில் வியப்பில்லை. சிறுபான்மைச்சமூகத்தினர் வசதி படைத்தவர்களாக இருந்தனர்; முஸ்லீம்கள் ஒருங்கிணைக்கப்பட்டால் தங்கள் பங்கு பறிபோய்விடும் என அவர்கள் கருதினார்கள். ஆகவே, எங்கள் இயக்கத்தை அச்சிறுபான்மையினர் எதிர்த்தார்கள்! அதற்கு வகுப்பு வாத வண்ணம் பூசினார்கள். ஆனால் நாங்கள் அதற்கு வகுப்புவாதச் சாயம் பூச விரும்பவில்லை. பின்னர். இந்த இயக்கம் வேரூன்றிவிட்டது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் ஏற்கனவே அறிவுத் திறன் பெற்றவர்களாகவும் படித்தவர்களாகவும் இருந்ததால் தனித்து நிற்பதால் பயனேதுமில்லை என உணர்ந்தார்கள்.

அப்பொழுதான் 1938என்று நினைக்கிறேன். மிகவும்நெருக்கடியான கட்டம் ஏற்பட்டது. முஸ்லீம்லீக் அச்சமயத்தில்தான் மீண்டும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியிருந்தது.

[இன்னும் வரும்]

கடந்த 16—4—78 அன்று பெருநகர் கிராமத்தில் கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் தலைமையில் திருமணம் செய்து கொண்ட 'நம்நாடு' நாராயணன்—செல்வி கமலா ஆகியோர் கழகத் தலைவர் கலைஞர் அவர்களை, இலத்தில் சந்தித்து வாழ்த்துப்பெற்றுக்கொண்டனர்.

புயல் - வெள்ளத் துயர்துடைப்பு நிதி!

23—4—'78 தேதிய இதழ் தொடர்ச்சி ...	54,927—26
கொச்சி எர்ணுகுளம் எம். எம். கபீர் ...	25—00
கோவை கல்லார்பாலம் எஸ். பி. திருமலை, கொச்சி-11, நசிமுதீன் ஆகிய 2 பேர் ரூ 11/- வீதம் ...	22—00
எர்ணுகுளம் அன்வர் அலி, எம். முகமது யாசின், எம். இராஜேந்திரன், வாலையாறுடேம் ஆர். சின்னதுரை ஆகிய 4 பேர் ரூ 10/- வீதம் ...	40—00
கேரளா வண்டாடி தங்கமாணிக்கம், கே.என். சுந்தரம், பாலக்கோடு என். மணி ஆகிய 3 பேர் ரூ 5/- வீதம் ...	15—00
மாயூரம் என். கிட்டப்பா, எம்.எல்.ஏ. ...	900—00
கும்பகோணம் சீனுவாசநல்லூர் எஸ். இராமலிங்கம், எம்.எல்.ஏ. ...	550—00
மாயூரம் கூறைநாடு ஏ. தேவேந்திரன் ...	550—00
,, அ. செங்குட்டுவன், நகரச் செயலாளர் ...	550 00
திருப்பரங்குன்றம், அவனியாபுரம் அ. மா. பிச்சை	501—68
தஞ்சை கூறைநாடு என். வடிவேலு ...	500—00
சேலம் கோட்டை எஸ். எச். செய்யத்பீர் ...	428—00
சென்னை, 24வது வட்டம் த. சு. மணி ...	250—00
புதுவை, 14வது வட்டம் ம. மணிமேகலை ...	201—00
செஸ்னை, தேனும்பேட்டை ஆர். பாலச்சந்திரன் ...	125—00
காஞ்சிபுரம், கிளை தமிழ்நாடு மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம் ...	115—00
பெங்களூர்-5, என். பொன்னுசாமி & குழுவினர் ...	111—00
முகவை திருப்புவனம் பட்டு கூட்டுறவு சங்க ஊழியர்கள் ...	101—00
கோவை-6 ஆ. சின்னசாமி ...	101—00
தஞ்சை திருமருகல் வி. சற்குணம் ...	101—20
செங்கை களாம்பாக்கம் திருவேலங்காடு ஒன்றிய சார்பாக ...	101—00
செங்கை மாமண்டூர் சி. ரத்தினசாமி ...	100—00
வில்லிவாக்கம் எஸ். முத்துகிட்டிணன் ...	100—00
தெ. ஆ. அண்டராயலூர் அ. செ. குமாரசாமி ...	100—00
காஞ்சிபுரம் டி. நடராசன் ...	100—00
சென்னை-81, மெட்டல்பாக்ஸ் கம்பெனி தொழிலாளர் நலச்குழு சார்பில் எம். நடராசன மூலம் ...	80 00
பெங்களூர்-21 சீனிவாசன், கே. கோபால், சுப்பிரமணி, சி. சுப்பிரமணி, வேலன், ஸ்ரீரங்கா, தாசப்பா, ஆர். மோகன், சந்திரன், சந்திரசேகர், ஜீவா, ஆறுமுகம், அமர்நாத், கிருட்டிணமூர்த்தி, சரவணன், அசோகன், செல்வராசு, சீனிவாசன். பலராமன், சுந்தரமூர்த்தி ஆகியோர் மூலம் ...	75—00
சதுரங்கப்பட்டினம் சி. மனோகரன் நண்பர்கள் ...	74—00
ஈரோடு-4, கே. என். குருசாமி ...	51—00
கோவை-22, பீ. இராசு ...	51—00
சென்னை-50, மண்ணூர்பேட்டை ஆர். கலைாசனு ...	51—00
மதுரை, கூடலூர் கே. எஸ். கோபால் ...	51—00
மதுரை-1, பா. முருகன் ...	51—00
மதுரை, பேரையூர் மாரிமுத்து ...	50—00
சேலம் வெ. குண்டம்பட்டி கே. கிருட்டிணன் ...	50—00
பெங்களூர், ஸ்ரீராமபுரம் ஆர். ஸ்ரீராமுலு ...	50—05
சென்னை-29, வே. த. செல்வன் ...	50—00
சென்னை-2, டி. கோவில்மணி நண்பர்கள் ...	50—00
மதுரை, சமயநல்லூர் தமிழ்நாடு மின்சார தொழிலாளர் முன்னேற்ற சங்க சார்பில் கே. இருளாண்டி மூலம் ...	41—00
மாயூரம், காவேரி நகர் எஸ். இராசாராம் ...	40—00
திருச்சி, மலைக்கோட்டை இ. க சண்முகம், ஆர். கோவிந்தசாமி, ஆர். கரீம்பாய், எம். ரங்கசாமி, ஆர். மாரிமுத்து, எஸ். சின்னசாமி கே. தியாகராசர், கே. ஆர். பெரியசாமி ஆகிய 8 பேர் ரூ. 5/- வீதம் ...	40—00
மதுரை. ஒட்டன்சத்திரம் நகரச் செயலாளர் ச. வடிவேல் ...	33—00
தெ. ஆ. திருட்பாப்புலியூர் து. நாகரத்தினம் ...	31—00
பம்பாய-51 பி. நெல்சன் ...	31—00
சென்னை, சைதை கலைஞர் ரிக்ஷா தொழிலாளர் மன்றச் சார்பில் ...	31—00
காஞ்சிபுரம், பாலு செட்டி சத்திரம் எம். கன்னிப் பிள்ளை ...	30—00
தெ. ஆ. மேல்பட்டாம்பாக்கம் என். தியாகராசன் ...	30—00
கே. ஜி எப். பாகேபள்ளி எஸ். எம். கே சுல்தான் ...	30—00
திருச்சி, மங்கம்மாள்புரம் கே. ஆதிமூலம் & கே. மு. அம்மான்	
திருவொற்றியூர் அறிஞர் அண்ணா நூலகம் எஸ், தசரதன் ...	30—00
காஞ்சிபுரம் சாமந்திபுரம் பி. ஜெயராமன், பம்பாய் எஸ். நல்லசிவன், பம்பாய்-60 தி.மு.க, கிளை, அக்தர் உசேன், பம்பாய்-51 எஸ். எஸ். பக்ருதீன் ஆகிய 5 பேர் ரூ. 25 வீதம் ...	125—00
தஞ்சை வீரமாங்குடி இரா. மணியன், கோவை தொண்டாமுத்தூர் கே. எம். சண்முகம், நாகம்மா, புதூர் என். எம். பழனிசாமி. பொள்ளாச்சி எஸ். கருணாநிதி, பம்பாய் பிரேம்நகர் ஆர். செல்லம்மாள், ஆர். இராமலிங்கம், ஆர். எஸ். சின்னபொண்ணு, ஏ. இராமசாமி, எஸ். வி. ஜெகதாம்பாள், எம். வி. சேகர். எம். இ. சாந்தி, ஆர். எஸ். குப்பம்மா. ஆர். எஸ். செல்லம்மா, எல். வி. அசோக், என். நாகம்மாள், என். என். சித்தா, பீ. பி. சிங், குமாரி ஆர். அமுதா, எம். வி. நித்தியானந்தம் என். நாகேந்திரன், எம். வி. சாமி, என் பொன்ராம், வி. ஏ. முகமது அலி, கஞ்சி யு. டியா, ஆர். சடையன், எம். டி. கவுஸ், கார்நகர் டி. எம். பொற்கோ: மதுரை ஜி. கோபால் சென்னை-1, என். அன்வர் பாரூக் தர்மபுரி தீர்த்தமலை ஆர். கணபதி, நாகர் கோவில், எஸ். சிவதாணு, ஆம்பூர் என். எம். சலாவுதீன், சென்னை-1 முகமது யூசுப், எம். முத்துராம், அப்துல் ரகுமான், கடலூர் ஜி. துளசி. ஆகிய 36 பேர் ரூ. 25 வீதம் ...	900—00
பெங்களூர்-21 இளவழகன், பம்பாய் ஜோகேஸ்வரி கே. மக்பால், கே. சித்தா, என்ஸ்ராஜ் சைட், பி. இராமலிங்கம், பிரேம்நகர் சேக்நாபா, பி. டி. சைன்டி, யு. அப்துல் ரசீத், மதுரை மார்க்கம்பட்டி, கே. பழனிசாமி, மண்டபம் எஸ். அப்துல் மசீத், கோவை, மொடத்தூர், ஏ. சுந்தரராசு காரமடை டி. வேலுசாமி, திருச்சி டி. என். சோமசுந்தரம், தஞ்சை கருந்தங்குடி, கே. காசிநாதன் ஆகிய 14 பேர் ரூ. 25 வீதம் ...	350—00
பெங்களூர்-43 பி கந்தசாமி, பசவனகுடி, ஜி. சாலமன், பெங்களூர்-53 பி. கே. ஆதம்ஷா, சேலம்-1 எஸ். இராசகோபால், திருச்சி வையம்பட்டி வெ. பி. ஏ. சுப்பிரமணியன் இலக்குமணம்பட்டி வேணுகோபால், சேலம்-4 பி, ராய் லாசரஸ், சேலம-1 ஏ. முருகேசன். காரைக்கால்-2 வி. எம். சலீம்ஷா, திருத்துறைபூண்டி டி. எஸ். கல்யாணசுந்தரம், அரியலூர் கே. சீனிவாசன், மடுவன்கரை சி. பத்மநாபன் ஆகிய 12 பேர் ரூ. 25 வீதம் ...	300—00
மதுரை கொடைக்கானல் ஒன்றியம் கே. வி. பி.எம். வீரப்பன் ...	10—00
,, பி. எஸ். கந்தசாமி, கே. எம். வீராசாமி ஆகிய 2 பேர் ரூ. 5 வீதம் ...	10—00
,, வி. சின்னராசு ...	2—00
சென்னை புதுவண்ணை ஏ. சகாதேவன் ...	21—00
முகவை எஸ். எம். அஷ்ரப் ...	21—00
சென்னை சபாபதிமுதலிதெரு பி. கிருஷ்ணன் ...	21—00
ஆகமொத்தம் ரூ ...	63,505—94

செத்தவள் கதை...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு மரம் தாவுகிற குரங்கு என்பாங்களா ?"

'செல்லாயி !...உன்னைப் பற்றி நான் எவ்வளவு மேன்மையா நினைச்சு இருந்தேன். வெளியூருக்குப் போனு வீட்டைப் பத்தியே நினைப்பு. வேற பெண்களைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டேன் என் நெஞ்சிலே உன்னைப் 'போட்டோ படமாக்கி வச்சிருந்தேன்! எல்லாத்தையும் ஒரு அடியில் உடைச்சு எறிஞ்சுட்டாயே!'

'செல்லாயி! நீ சாக்கடையில் மிதக்கிற புழுவைவிடக் கேவலமானவள் ஆடம்பரத்திலே மயங்கி, அறிவைக் கொலை செய்துகொண்ட அற்பமான வீட்டில் பூச்சி நீ; ஒரு விஷயம் தெரிஞ்சுகிட்டேன். பொம்பளைகள் குரங்கு மனசானும் கெடுவதுண்டு எல்லாத்துக்கும் சமுதாயம் பொறுப்பாக முடியவே முடியாது."

"பேச்சால் என்னைக் குத்திக் குடைய வேண்டாம்; வேணும்னு என்னைக் கொன்னு போடுங்க'

'கொல்லத்தான் போகிறேன். நாளைக்குக் கோவிந்தன் முகத்திலே ஒரு 'கோசா' வாக முழிக்கமாட்டேன். ஒரு கொலைகாரனாகத்தான் தரிசனம் கொடுப்பேன். செல்லாயி, நீ செத்தால் நானும் சாவேன் என்று எத்தனையோ தடவை, இந்தப் படுக்கையிலேயே சொல்லியிருக்கேன். இப்ப உன்னைச் சாக அடித்துவிட்டு நான் வாழப் போகிறேன்.'

பேச்சு முடிவதற்குள் எல்லப்பன் பாய்ந்தான்.

"ஆ அய்யோ...ஹ...ஹ்......"

செல்லாயி சுருண்டு கீழே விழுந்தாள். அவள் தொண்டைக் குழியில் அழுத்தியிருந்த பெருவிரலை எல்லப்பன் எடுத்தான்.

செல்லாயியின் சவம் சுடலையில்! எல்லப்பன் கையால் தீ மூட்டப்பட்டது.

'தங்கமான பெண். தலைலாகப் போகிறாள்' தெருவின் ஒப்பாரி.

"தங்கமல்ல. மெருகு பூசிய மட்டப் பித்தளை" எல்லப்பனின் இதய இடிகள்!

செல்லாயி எரிந்தாள்.

'முன்னையிட்ட தீ முப்புரத்திலே!
பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே!
என்மனைவியிட்ட தீ மங்காதமானத்திலே!
யானுமிட்ட தீ விபசாரக் கோட்டையில் மூள்க மூள்கவே!"

எல்லப்பன் பாடவில்லை.

'செத்தவள் கதை'க்கு அவன் மனதில் அலைமோதிய 'மங்களம்' இது.

ஜனதா அரசு செய்யப் போவது என்ன?

இந்தியா முழுக்க என்றுமில்லாத அளவுக்கு இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் உயர் சாதிக்காரர்களாலும், நிலப்பிரபுக்களாலும் தொடர்ந்து பழி வாங்கப்பட்டு வருகிறார்கள் என்பதை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை

'இந்தியாவின் 'இரண்டாவது விடுதலைப் போராட்ட வீரர்களால்' தாழ்த்தப்பட்டவர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க இயலவில்லை என்பதை-பெல்சி, பதாட்டா, பெகுசராய், தரம்புரா-போன்ற கிராமங்களில் நடந்த வன்முறைத் தாக்குதல்களும் தீ வைப்புகளும், படுகொலைகளும் மெய்ப்பித்துள்ளன.

பெல்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் சிந்திய கண்ணீரும், செந்நீரும் உலர்வதற்குள்-

மார்ச் திங்களில் பீகாரிலிருக்கும் பிஷ்ராம்பூர் என்ற கிராமத்தில் பல தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகளும் வறுமையால் வாடும் வயிறு ஒட்டிய ஏழைகளும் உயிரோடு கொளுத்தப்பட்டிருக்கிறார்கள்!

ஆனால் ஒரு வித்தியாசம்-

பெல்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது கொலைத் தாக்குதல்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்று காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்ட போதும், அவர்கள் தக்க நேரத்தில் வந்து அவைகளைத் தடுத்து நிறுத்தவில்லை.

பிஷ்ராம்பூரில், காவல் துறையினர் கைகட்டி நின்று வேடிக்கை பார்க்க—அவர்கள் கண்முன்னாலேயே-நிலப் பிரபுக்களால் கொலை செய்யப்பட்ட தாழ்த்தப்பட்டோரின் சடலங்கள் விழுந்துள்ளன-ஒன்றன்பின் ஒன்றாக!

ஏறத்தாழ இருபத்து நான்கு நிலப்பிரபுக்கள் ஆயுதங்கள் தரித்துவந்து பெல்சியில் தாழ்த்தப்பட்டோரை வேட்டையாடினார்கள். பிஷ்ராம்பூரிலோ-

சுற்று வட்டாரத்திலுள்ள நிலப் பிரபுக்களெல்லாம் திரண்டு ஏறத்தாழ ஐந்தாயிரம் பேர்கள்-ஆயுதங்கள் தரித்து வந்து கிராமத்தையே சுற்றி வளைத்துக் கொண்டார்கள்; பிறகு குடிசைகளை நோக்கித் தீப்பந்தங்களை வீச-ஆவேசங்கொண்ட தீயின் செந்நாக்குகள் வானளாவ உயர உயர-தாழ்த்தப்பட்டோர்கள் கதறக் கதற-அவர்களைப் பிடித்து அனலிடையே தள்ளியிருக்கிறார்கள் அந்தக் கல்நெஞ்சுக்கார நிலப்பிரபுக்கள். பெண்கள் என்றும், குழந்தைகள் என்றும் பாராது அவர்கள் தங்கள் கொலைத் தாண்டவத்தை நிகழ்த்தியிருக்கிறார்கள்!

உயிரோடு கொளுத்தப்பட்டுக் கரிக்கட்டையானவர்கள் எத்தனை பேர் என்று யாருக்குமே தெரியாது...

தங்கள் உயிர்கள் மீது கொண்ட ஆசையால் தப்பிப் பிழைத்த தாழ்த்தப்பட்ட ஆண்கள் அனைவரும் பிஷ்ராம்பூரிலிருந்து ஓடியே விட்டார்கள்.

பெண்களிடம் போய், 'என்ன நடந்தது?" என்று கேட்டால், அவர்கள் பேசும் சக்தியை இழந்தவர்களே போல் மிரள மிரள விழிக்கிறார்கள்.

சருகிப் போன கரங்கள், கால்கள் விரல்கள், எலும்புகள்-கிராமம் முழுக்கப் பரவிக் கிடந்தன!

இந்தப் படுகொலைகள் நடப்பதற்கு முன்னரே காவல் துறையினர் அக் கிராமத்திற்கு வந்த போதும் அவைகளைத் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மாறாக தொடர்ந்து ஐந்து மணி நேரம் நிகழ்ந்த அந்தச் சோக நாடகத்தை மௌன சாட்சிகளாக நின்று வேடிக்கை பார்த்திருக்கிறார்கள்.

நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தைத் தாழ்த்தப்பட்ட விவசாயப் பெருமக்கள் விரும்பாததால்-ஏற்றுக் கொள்ள மறுத்ததால்-இக்கொலை பாதகங்கள் நிகழ்ந்துள்ளன.

பிஷ்ராம்பூரிலிருக்கும் தாழ்த்தப்பட்டோரும், விவசாயிகளும் இயற்கையிலேயே விடுதலை விரும்பிகள். எந்த நிலப்பிரபுவின் கீழும் கூலிக்கு வேலை பார்க்க அவர்கள் விரும்புவதில்லை: பெரும்பாலானோர் தங்களுக்கிருக்கின்ற 'கையளவு' நிலத்திலேயே உழுது பயிரிட்டுக் காலத்தை ஓட்டுவதில் மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர்.

பிறர் முதுகின்மீது ஏறிச் சவாரி செய்வதையே பிறவிக் குணமாகக் கொண்ட நிலப்பிரபுக்கள் இதனால் ஆத்திரம் அடைந்திருப்பதில் வியப்பேது? தங்களுக்கு அடிமைகளாக இருந்து ஊழியம் செய்ய மறுத்த தாழ்த்தப்பட்டவர்களை வாய்ப்புக் கிட்டியபோதெல்லாம் வம்புச் சண்டைக்கு இழுத்துக்கொண்டிருந்தார்கள் நிலப்பிரபுக்கள்:

"எங்கள் வயல்களில் நுழைந்து தாழ்த்தப்பட்டவர்கள் தானியங்களைத் திருடிக் கொண்டு போய்விட்டார்கள்... எங்கள் வயல்களுக்குள் தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் ஆடுமாடுகளைவிட்டு மேய விடுகிறார்கள்...' என்பன போன்ற ஏதாவது பொய்க் காரணங்களைக் காட்டி!

படுகொலைகள் அசந்தர்ப்பமாகவோ உணர்ச்சி வேகம் உந்தித் தள்ளிய ஒரு கணத்திலோ நடந்ததல்ல...

தாழ்த்தப்பட்டவர்களுக்கு 'ஒரு சரியான பாடம்' கற்பிக்க நிலப்பிரப்புக்கள் தக்க தருணம் பார்த்துக்கொண்டிருக்கையில்—

கிராமத்துத் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக விளங்கிய பன்ஸ்ரோபன் என்பவர், மார்ச் திங்கள் ஆறாம் தேதி நடந்த ஒரு கொலை விவகாரத்தில் தொடர்புகொண்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டார்.

அவருடைய வீட்டிலிருந்து அனுமதி பெறாத துப்பாக்கியைக் கைப்பற்றியதாகக் கூறிய காவல் துறையினர், அவர் மீது ஒரு வழக்கும் போட்டனர்.

மார்ச் திங்கள் இருபத்திரண்டாம் தேதியும், இருபத்து மூன்றும் தேதியும் நிலப்பிரபுக்கள் ஒன்றுகூடி தீவிர 'ஆலோசனைகள் நடத்தினார்கள்.

அக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் ராமவதேஷ் சிங் என்ற நாடாளுமன்ற உறுப்பினர்.

[தாழ்த்தப்பட்டவர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்புகள் தரப்படுவதை எதிர்த்து ஏற்கனவே இவர் கண்டன ஊர்வலம் நடத்தியவர். அப்போது திரு ஜெயப்பிரகாஷ் நாராயணனை அவர் கடுமையான வார்த்தைகளால் சாடினார்.]

நிலப்பிரபுக்களின் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் என்னென்ன 'தீர்மானங்கள்' எடுக்கப்பட்டன என்று யாருக்கும் தெரியாது,

இதற்கிடையில் —

அடுத்துவந்த சனிக்கிழமை காலை, கொழுத்த பணக்காரரும் நிலப்பிரபுவுமான ஹீரா சௌதுரி என்பவர் கொலை செய்யப்பட்டார். அவர் பெயரைச் சொன்னாலே அழுத பிள்ளை வாய்மூடும். அந்த வட்டாரத்திலேயே 'அதி பயங்கர மானவர்' எனப் பெயரெடுத்தவர் அவர்.

காவல் துறையினரின் முதல் தகவல் (F. I. R) இக் கொலையில் பன்ஸ்ரோபனும், அவருடைய சகோதரரும் தொடர்புகொண்டிருக்கக் கூடும் எனக் கூறியது.

ஆயுதம் தாங்கிய நான்கு காவலர்களுடன் ஒரு துணை சப்-இன்ஸ்பெக்டர் (A. S. I.) பகல் ஒரு மணிக்கெல்லாம் கிராமத்திற்கு வந்து முகாம் போட்டார். அதே நேரத்தில்-

பழனி சித்தார்த்தன்

அக்கம் பக்கத்திலிருக்கும் நிலப்பிரபுக்களும், பிஷ்ராம்பூர் நிலப்பிரபுக்களும் ஒன்று சேர்ந்து கிராமத்தையே சுற்றி வளைத்து முற்றுகையிட்டார்கள். துப்பாக்கிகள், ரிவால்வார்கள், கத்திகள், அரிவாள்கள்-இன்னபிற ஆயுதங்கள் அனைவருடைய கரங்களிலும் மின்னிப் பளிச்சிட்டது!

அருகே இருக்கும் தினரா காவல் நிலையத்திற்கு 'வெடிக்கப் போகும் பூகம்பம்' குறித்துத் தகவல் தெரிவிக்கப்பட்டது ஐந்து மணிக்கு அதிகாரிகளின் தலைமையில் காவல் படை கிராமத்திற்கு வந்தது.

வந்து என்ன செய்ய?

அவர்கள் என்ன படுகொலைகளைத் தடுத்து நிறுத்தவா வந்தார்கள்? இல்லை, வேடிக்கை பார்க்கவே வந்தார்கள்...

நிலப்பிரபுக்களின் பார்வை பன்ஸ்ரோபனின் தந்தை மீதும் தாயார் மீதும் முதலில் விழுந்தது: வயதான அவர்கள் ஈவிரக்க மற்றுக் கொல்லப்பட்டபின். நெருப்பிடையே தூக்கி எறியப்பட்டார்கள்! அடுத்து பதினைந்து வயதான சிறுவன் கொல்லப்பட்டு நெருப்பிடையே எறியப்படுகிறான்...அதற்கடுத்து எழுபது வயதான ஒரு கிழவர்...அடுத்தடுத்துக் கொல்லப்பட்ட சடலங்களைத் தீ நாக்குகள் ஆவலோடு சுவைக்கின்றன...

அந்த ஏழை மக்களின் வீடுகள் சூறையாடப்படுகின்றன; உயிர் வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருட்களும். தட்டுமுட்டுச் சாமான்களும் கொள்ளையடிக்கப்படுகின்றன; கருகிய சடலங்கள் டிராக்டரில் ஏற்றிச் செல்லப்பட்டு அப்புறப்படுத்தப்படுகின்றன; அவர்கள் செல்லமாக வளர்த்த ஆடு, மாடு, கோழி, நாய்-போன்ற வீட்டுப் பிராணிகளும் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன

பீகாரில் ஜனதா அரசு ஆட்சி தொடங்கிய நாளிலிருந்து இந்நாள்வரை தாழ்த்தப்பட்டவர்கள் படுகொலைகளுக்காளாவதும். உயிரோடு சொளுத்தப்படுவதும் முடியாத கதைகளாகத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன; அதுமட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்களிடமிருக்கும் சிறிது நிலத்தையும் பிடுங்கிக் கொண்டு அவர்களை விரட்டி அடித்துக் கொண்டு வருகிறார்கள் நிலப் பிரபுக்கள்...இன்று ஏறத்தாழ ஐம்பதினாயிரம் தாழ்த்தப்பட்டவர்கள் நிலங்களைப் பறிகொடுத்து விட்டுப் பரிதவித்து நிற்கிறார்கள்.

நில உச்சவரம்புச் சட்டம். உழைக்கும் விவசாயிக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்சக் கூலி, விவசாயிகளுக்கான கடன் ஒத்தி வைப்புச் சட்டம் எல்லாமே காகித அளவில் தான் இருக்கின்றனவே தவிர' நடைமுறைக்கு வரவில்லை.

இதனால்—

முதலாளித்துவ நிலப் பிரபுக்களின் பாதுகாப்பு அரண் தான் ஜனதா கட்சி என்று பிறர் குறை கூறினால் அதில் தவறேது?

தாழ்த்தப்பட்ட, உழைக்கும் வர்க்கத்திற்குப் பாதுகாப்பளிக்கத் திறமைபற்ற ஜனதாக் கட்சி இன்னும் ஆட்சியில் நீடிக்க வேண்டுமா என்று கூடச் சிலர் கேட்கிறார்கள்:

'பெல்சியிலும். பிஷ்ராம்பூரிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் கொன்று குவிக்கப் பட்டபின்னரும். அவர்களைக் காக்கச் சக்தியற்ற ஜனதா அரசு பதவியில் நீடித்திருப்பது வெட்கக்கேடு! கொஞ்சமேனும் மானம் வெட்கம் இருந்தால் ஜனதா அரசு தூக்குப் போட்டுக் கொண்டு சாக வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவரும், முன்னாள் பீகார் முதலமைச்சருமான ஜகன்னாத் மிஸ்ரா கடுமையாகச் சாடியுள்ளார்.

'பிஷ்ராம்பூர் படுகொலைகள் அதிர்ச்சியூட்டுகின்றன; நெஞ்சம் கலங்கச்செய்கின்றன இதற்கான முழுப் பொறுப்பையும் ஜனதா அரசே ஏற்க வேண்டும். பெல்சி பிஷ்ராம்பூர் போன்ற பல இடங்களில் நடந்த படுகொலைகள் தாழ்த்தப்பட்ட ஏழை — மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பளிக்க ஜனதா அரசால் இயலாது என்பதையே மெய்ப்பிக்கின்றன, தீண்டாமை ஏழைகளின் முன்னேற்றம் — குறித்துஜனதா அரசு எழுப்பும் கோஷங்கள் பொய்யானவை. முதலாளித்துவ நிலப் பிரபுக்களின் நலன்களைக் காக்கும் அரசே ஜனதா அரசு ஜகன்னாத் சர்க்கார் போன்றோர் இவ்வாறு கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

காவல் துறையினருக்குத் தலைமைதாங்கி வந்த அதிகாரியும், ஆயுதப் பிரிவைச் சேர்ந்த ஆறு காவலர்களும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்களாம், இப்போது!

இந்தச் சிறிய தண்டனை அவர்களுக்குப் போதுமா?

மேலும்—

நச்சு வேரை வெட்டிச் சாய்க்காமல் வெறும் கிளைகளை அவ்வப்போது ஒடித்துப் போடுவதால் என்ன மாற்றம் ஏற்பட்டுவிடப் போகிறது?

சிறுநீர் மகாத்மியத்தைப் பற்றி பஜனை பாடுதல்; அகில இந்தியா முழுக்க மதுவிலக்கு என்ற வெகுதூரக் கனவை உடனடியாக நனவாக்க அவசரம் காட்டுதல்; இந்தியைத் திணிப்பதில் முழு மூச்சோடு செயலாற்றுதல்; ஷா கமிஷனுக்கும். சர்க்காரியா கமிஷனுக்கும் ஒரே வண்ணம் பூச முயற்சி செய்து இரட்டைச் சிந்தனைகளோடு விசாரணைக் குழுக்கள் அமைத்துத் தங்களை மட்டும் தியாக சீலர்களாக, வீராதி வீரர்களாக மக்கள் முன் படம்பிடித்துக் காட்டிக் கொள்வதில் ஆர்வமாக இருத்தல் - போன்றவற்றில் தீவிரமாக இருக்கும் ஜனதா கட்சி நண்பர்கள், உயர் சாதியினர், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் கொடுமைகளிலிருந்து தாழ்த்தப்பட்டவர்களை, உழைக்கும் ஏழை மக்களைப் பாதுகாக்க கொஞ்சமேனும் முயற்சி எடுத்துக் கொள்ளக்கூடாதா? ★

சாகாக் கவிஞன்!

—: புலவர் வெற்றியழகன் :—

தமிழுக்கே அமுதென்று பெயர்தந்தவன்—இன்பத்
தமிழெங்கள் உயிரென்று புகழ்கொண்டவன்!
தமிழுக்கு மதுவென்று பெயர்தந்தவன்—இந்தத்
தமிழ்தனையே உணவாகத் தினம்உண்டவன்!

கவிவானைக் கரமேந்திக் களஞ்சென்றவன்—தீமைச்
சமூகத்தினைக் கொய்திடவே மனங்கொண்டவன்!
புவிவாழப் புதுப்பாடல் பலதந்தவன்—பெரும்
புரட்சியினைக் கவியுலகில் விளைவித்தவன்!

குடும்பத்தின் விளக்கேற்றி ஒளிநந்தவன்—தமிழ்க்
குலம்வாழக் கவிமாரி பொழிந்திட்டவன்!
புடம்போட்ட பெரியாரின் வழிகண்டவன்—அந்தப்
புதுப்பாதை நடந்திட்ட விழிகொண்டவன்!

பாரதிக்கு மாணவனாய்ப் பெயர்கொண்டவன்—அந்தப்
பாரதியை விஞ்சுகின்ற கவிதந்தவன்!
பாரதிக்குப் புகழ்தேடிச் சிறப்புற்றவன்—தன்
பாவாலே இறவாத வரம்பெற்றவன்!

மாவீரன் லெனினை நினைவு கூர்வோம்!

வானமுட்டும் மலைகள், எல்லையின்றிப் பரந்த சமவெளி, நீண்ட நெடிய வயல்கள் பச்சைப்பட்டு விரித்தாற் போன்ற பசுமை நிறைந்த பயிர் நிலம். கங்கையைப் போன்ற புனல் நிறைந்து பாய்ந்தோடும் ஆறுகள் கண்களுக்குக் காட்சியாக மண்டிக் கிடக்கும் காடுகள். வடஎல்லைப் பகுதியில் உருகாப் பனிப்பாறைகள். தெற்கே இதமான சடல் வெப்பத்தின் ஆட்சி. பசுபிக் மாகடலில் தோன்றும் ஞாயிறு—நாட்டின் கிழக்கு எல்லையிலிருந்து மேற்கு எல்லையை அடைய ஏறக்குறைய பதினொரு மணி நேரம் ஆகும். புதுமை இதுதான்! மனித குலத்தின் மகத்தான தலைவர் லெனினைப் பெற்றுத் தந்து பெருமையோடு திகழ்ந்துவரும் புனித பூமி சோவியத் ருஷியா! ஆம்! பாட்டாளி ஆட்சி நடக்கும் பரந்த நாடு.

இருபத்தைந்து கோடி மக்களுக்கும்மேல் வாழ்ந்துவரும் இன்ப பூமி நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகள் பேசுகின்ற குடிமக்கள் செல்வத்திலும், செல்வாக்கிலும் செருக்கோடு திகழ்ந்துவரும் சோவியத். காரணம பரந்த நிலப்பரப்பு என்பதாலோ சோவியத் மண்ணில் மண்டிக்கிடக்கும் செல்வத்தாலோ அல்ல. சமத்துவ வாழ்க்கையின் சட்டம் ஆங்கே செங்கோல் ஓச்சுகிறது. மன்னர் ஆட்சி மண்ணுக்குள் புதைக்கப்பட்டு பாட்டாளித் தோழனின் ஆட்சி அங்கே தோற்றம் கண்டுள்ளது. முதலாளிகள் தொன்றுதொட்டு தொழிலாளியைச் சுரண்டி வந்த தொடர்கதைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாகிவிட்டது. நிலவுடமை ஆதிக்கம் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. கூட்டுப்பண்ணை வேளாண்மை குதூகலத்தோடு தொடங்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் அனைத்தும் அரசின் வசமே ஆகிவிட்டன. தொழிலாளர்கள் அனைவரும் ஆலைகளின் சொந்தக்காரர்களாகிவிட்டார்கள். நாட்டின் முன்னேற்றம் நாலா பக்கங்களிலும் அமைக்கப்படுகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே உள்ளது. தொழிற்சாலைகள் தொடங்கி நடத்திட மூலாதாரமாக வேண்டுவதே மின்சக்தி அல்லவா!

மின் உற்பத்தியே நாட்டின் முதல் திட்டம் என அறிவித்துச் செயலில் இறங்கியவர் செந்நிலத்தின் தலைவர் லெனின். 1917 அக்டோபர் புரட்சிக்குப்பின் ஆட்சிக்கு வந்த மக்களின் மகத்தான தலைவர் லெனின் போட்ட திட்டங்களும் பதுப்பித்த செயல்முறைகளும் மேலே சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

புதுப்பாதையில் நடந்திட முனைந்து செயல்பட்டார். பொதுவுடைமை ஆட்சிக்கு எதிர்ப்பு புவியின் சில இடங்களிலிருந்து வந்ததை அவர் பொருட்படுத்தவில்லை. மாறாக புது வேகம் காட்டினார். உலகின் முன்னேடி நாடுகளில் சில சோவியத் நாட்டை அங்கீகரிக்க மறுத்துவிட்டன. ஆனாலும் லெனினே அதை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை தொய்வின்றித் தன் திட்டத்தைத் தொடர்ந்தார். விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்டார்.

தாய்மொழி வளர்ச்சிக்குத் தங்கு தடையின்றி ஊக்கம் அளிப்பதில் ஊன்றுகோலாக நின்றார். மொழிவழி தேசிய இனங்கள் விழிப்பாக இருந்து செழிப்பாக வளர்வதை ஆக்கபூர்வமாக ஆதரித்தார். மொழிவழி பிறந்து, இனவழி நின்று நிலவழி ஒன்றுபட்டு வாழ்ந்திட அரசியல் சட்டத்தை ஆக்கிய பெருமை மாமேதை லெனினைத்தான் சாரும்.



'சோவியத் சோசலிசக் குடியரசுக் கூட்டாட்சி'யில் பதினைந்து குடியரசு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. பிரிந்து செல்லும் உரிமையோடு இணைந்து நின்று வாழுகின்றன. ஒவ்வொரு குடியரசும் தனக்கென்று தனிக்கொடியோடும், தேசியத் தன்மையோடும் பார் போற்ற வளத்தோடு வாழ்கின்றன. ஐக்கிய நாட்டு மன்றத்தில் தனிநாடு தன்மையில் அங்கம் வகித்திடவும் உரிய வாய்ப்பு அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டிருக்கின்றது. அரசு அங்கீகரித்துள்ள மொழிகள் அனைத்தும் சம அளவில் வளர்ச்சி அடைய வாய்ப்பும் வசதியும் அரசியல் சட்டத்தில்வடிக்கப்பட்டுள்ளது.

உலகில் அமைதி உண்டாக்குவதில் அக்கறை செலுத்தினார் லெனின். ஆக்கபூர்வமாக திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்த அமைதிக் காலத்தில் தான் இயலும் என்று ஆணித்தரமாக நம்பினார் செயல்பட்டார்.

நாட்டு மக்களின் அடிப்படைத் தேவையை அலசி ஆராய்ந்தார். கல்வி அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டும். இளைஞர்களுக்கு மட்டுமல்ல. முதியோருக்கும் முறையாக அளித்திட விரைவாகச் செயல்பட்டார். இலக்கியச் சுவைஞரவர். டால்ஸ்டாய் எழுதிய 'அன்னாகரீனா'வை எண்ணற்றமுறை படித்துச்சுவைத்தார் சிறுகதையின் தந்தை கோகல் எழுதிய சிறு கதைகளை படித்துச் சுவைக்கத் தவறியதில்லை. இலக்கியங்களைச் சுவைத்தது மட்டுமன்றி இலக்கியம் எப்படி இருக்க வேண்டும்—எதைச் சொல்ல வேண்டும் என்பதற்கும் இலக்கணம் சொன்னார் லெனின்.

கல்வித் துறையைப் பற்றி, ஆழச் சிந்தித்த அனுபவபூர்வமாகச் முதல் மனிதனாக அவரர்கத்தான் இருப்பார். குருட்டு மனப்பாடம் இளைஞரின் மனத்தில் இருட்டைப் பாய்ச்சிவிடுகிறது என்றும் கல்வி என்பது அன்றாட வாழ்க்கையின் அங்கமாக இருக்க வேண்டும் என்றும் அடிக்கடி சொன்னார். அதை அமுல்படுத்தினார்.

மாக்சிம் கார்க்கி போன்ற படைப்பாளர்களின் எழுத்துக்கள் இளைத்துவிடாமல் கடைசி வரைக்கும் கம்பீரமாக நின்றதற்குக் காரணமே லெனின் ஒரு தலைசிறந்த விமர்சகராகக் கார்க்கிக்குக் கிடைத்தது தான்

கார்க்கியின் எழுத்துக்களைப் புடம்போட்ட லெனினின் விமர்சனங்கள் உதவின.

லெனின் காரல் மார்க்சின் மூல நூலுக்குக் குருதியால் உரையெழுதிய வீரன் சோவியத் என்ற தனி மண்ணுக்கு மாத்திரமல்லாமல், மனித இனத்தின் காலடிச் சுவடுகள் பதிந்த இடத்திற்கெல்லாம் அவனது இலட்சியங்களே பொருந்தும்.

நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை செய்வாரடி—
கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி

என்ற வரிகளுக்கு எடுத்துக்காட்டாக அரசியல் நடத்தும் உலகில், சொன்னதைச் செய்த ஒரே தலைவன் மாவீரன் லெனின்

மனித வரலாற்றின் நாட்கள் புதிய பாடங்களை அவனிடம் கற்றுக்கொள்வதற்காகக் காத்திருக்கின்றன. லெனினின் பிறந்தநாளில் இவற்றை நினைவு கூர்வோம். ★

·சா.கு.

முப்பத்தாறு ஆண்டுக்கு முன்:

கலைஞர் நடத்திய விழாவுக்கு பாவேந்தர் அனுப்பிய வாழ்த்து!

தண்பொழிலில் குயில்பாடும் திருவா ரூரில்
தமிழ்நாடு தமிழ்மாண வர்மன் றங்காண்!
வண்மையொடும் உண்மையொடும் வாழ்ந்தி டுங்காண்!
மக்களிடை எழுச்சிக்கு மருந்தா குங்காண்!

கண்மூடிக் குறிமறந்து தமிழர் தங்கள்
கலைமறந்த நெஞ்சத்தில் ஒளியெய் துங்காண்!
புண்வாய்ந்தோர் அல்லர்காண்! திருவா ரூரின்
புலிஇளைஞர் காண்! தோள்கள் பூரித் தார்காண்!

எழில்மன்றச் சட்டத்தை உயிரைப் போலே
எண்ணிஅந்த வண்ணமே நடப்பார் கள்காண்!
ஒழித்தார்காண் அயர்வுதனை! அவர்கள் நாளும்
உயர்கவிதைச் சுவைதன்னில் தோய்ந்திட் டார்காண்!

மொழியினிலே தமிழ்மொழியே உயர்ந்த தென்றும்
மூச்செல்லாம் தமிழுக்கே என்றும், நல்ல
வழியறிந்து விட்டாார்காண்! முத்த மிழ்க்கு
மடைகோலி விட்டார்காண் உலகில் பாய்ச்ச!

கிளம்பிற்று காண்தமிழ்ச் சிங்கக் கூட்டம்!
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்கூட டத்தை
வளம்பெரிய தமிழ்நாட்டில் தமிழ ரல்லார்
வால்நீட்டி னால்உதைதான் கிடைத்தி டுங்காண்!

'தலைப்புதுபார் பத்தியென்றும் யோக மென்றும்
சாமியென்றும் முழுமியென்றும் எழுதிப் பேசி
புளுகுதல்' இனிப்பலிக்க வழியில்லை காண்!
புதுவாழ்வு மலர்ந்ததுகாண் தமிழ்நாட் டின்காண்!

[திருவாரூரில் கலைஞரால் தொடங்கப்பட்ட தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தின் முதலாண்டு விழாவிற்கு 21—11—42இல் புரட்சிக்கவிஞர் அனுப்பிவைத்த வாழ்த்துக் கவிதை]

இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதது!
குடும்ப நலத் திட்டம்!
உங்கள் இல்லத்திற்கு இன்றியமையாதது
எங்களது சுலபத் தவணைத் திட்டம்
எம். கே. டிரேடர்ஸ்
H.O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை'

"உழைப்பாளி"
(ஆசிரியர்: காட்டூர்கோபால்)
தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின்
அதிகார பூர்வமான கிழமை ஏடு
"மே" தினம்!
தொ. மு. ச. பேரவையின் எட்டாம் ஆண்டு நிறைவு!
உழைப்பாளி ஏட்டின் நான்காம் ஆண்டு நிறைவு!
ஆகியவற்றையொட்டி
கழகத்தலைவர் டாக்டர் கலைஞர்-
பொதுச்செயலாளர் பேராசிரியர்-
தொ. மு. சங்கத் தலைவர்கள்
ஆகியோரது சிறப்புக் கட்டுரைகள்-சிறுகதைகள்- கவிதைகளுடன்
சிறப்பு மலர் தயாராகி வருகிறது'
மே முதல் வாரம் வெளிவருகிறது
மலர் விலை ரூ. 2
மலர் தேவைப்படுவோர் முன்பணம் அனுப்பிப்பதிவு
செய்துகொள்ள வேண்டுகிறோம்.
"உழைப்பாளி" 'அறிவகம்'
24, சூர்யநாராயண செட்டிதெரு, இராயபுரம் சென்னை-13

அண்ணபற்றி புரட்சிக் கவிஞர்!

தமிழுக்குத் தொண்டு செய்து சிறைக்குச் சென்றோன்
கலைசிறந்த பேச்சுவல்லோன் தமிழ வீரன்
தமர்என்றும் தான் என்றும் நினைப்ப தன்றித்
தமிழ்நாட்டின் நலத்திற்கே உயிர்உ டல்கள்
அமைக; என உழைக்கும் மேலோன்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால். அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம் சென்னை 600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்: 'அன்பகம்' 1/104-B. அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009